# உதயன்

விலை ரூபா 6-00

30 JUL 1998

சுடர்13 வள்ளுவர் ஆண்டு 2029 ஆடி 14 வியாழக்கிழமை (30-07-1998) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 209


## 7 பெண்களின் சடலங்கள் தீவுப்பகுதிகளில் ஒதுங்கின

யாழ்ப்பாணம், ஜூலை 30

தமிழகம்நோக்கி ஈழ அகதிகள் சென்று கொண்டிருந்த படகு ஒன்று இராமேஸ்வரத்தில் கடந்த சனிக்கிழமை கவிழ்ந்ததில்காணாமற்போனவர்களில் 7 பெண்களின் சடலங்கள் நேற்று தீவுப்பகுதியில் கரை ஒதுங்கின.

நயினாதீவுப் பகுதியில் இரு சடலங்களும்—

குறிகட்டுவானில் ஒரு சடலமும்—

நெடுந்தீவில் நால்வரின சடலங்களும் — கரையொதுங்கின.

நயினாதீவுப்பகுதியில் கரையொதுங்கிய சடலத்தில் நகைகள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

சடலங்களை விசாரணையின் பொருட்டு பொலீஸார் பொறுப்பேற்றுள்ளனர்.

இந்தப் படகு விபத்தில் 15 பெண்கள் 5 குழந்தைகள் உட்பட 44 பேர் உயிரிழந்தது தெரிந்ததே. (இ-3)

## புலிகள் மீண்டும் படகுகளில் வந்து தாக்கினராம்

### படைத்தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

படகுகளில் வந்த விடுதலைப்புலிகள் நேற்று முன்தினம் இரவு 10.15 மணியளவில் யாழ் பொலீஸ் நிலையம், குருநகர் அகதி முகாம் ஆகியவற்றைத் தாக்கினர் என்று பலாலி இராணுவத் தலைமையகச் செய்திக் குறிப்பு தெரிவித்தது.

ஆர்.பி.ஜி மற்றும் சிறுரக ஆயுதங்கள், 40 மி. மீ. கிரனேட்டுக்கள் கொண்டு புலிகள் தாக்குதல் நடத்தினர் என்றும்—

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கைப் பிரச்சினையில் இந்திய மத்தியஸ்தம் தேவை!

## தேன் எடுக்க சென்றோர் சடலமாக மீட்பு

வவுனியா, ஜூலை 30

தேன் எடுக்கச் சென்ற இருவர் தலையில்லா முண்டங்களாக மீட்கப்பட்டனர்.

வவுனியாவில் மயில் முட்டை இட்டகுளம் பகுதியில் மாணிக்கம் குணராசா (23வயது), லக்ஷ்மணன் யோக

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐந்து தமிழ்க் கட்சிகள் வாஜ்பாய்க்கு மகஜர்

கொழும்பு, ஜூலை 30

இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியா தலையிட்டு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்று ஈ. பி. ஆர். எல். எவ்., புளொட், ஈ. பி. டி. பி., ரெலோ, தமிழர் விடுதலைக் கூட்டணி ஆகிய 5 தமிழ்க் கட்சிகளும் இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

இலங்கையில் உள்ள இந்தியத் தூதுவர் ஊடாக இது தொடர்பான மகஜர் நேற்று இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கு அனுப்பப்பட்டுள்ளது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழ் மக்கள் வரலாற்றில் கண்டிராத வேதனையை அனுபவித்துக் கொண்டிருக்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய் தொண்டா நாளை சந்திப்பு

கொழும்பு, ஜூலை 30

கொழும்பு வந்துள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும், இ. தொ. கா. தலைவரும், அமைச்சருமான எஸ். தொண்டமான் தலைமையிலான குழுவினருக்கும் இடையேயான பேச்சுக்கள் நாளை நடைபெற விருக்கின்றன.

இந்தப் பேச்சுக்கள் இன்று இடம்பெற ஏற்பாடாகியிருந்தது.

தற்சமயம் இதுபிற்போடப்பட்டு நாளையே நடைபெறவிருக்கின்றது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கடலேரியில் இறந்தோரில் மற்றொருவர் சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

குருநகர் கடற் பிராந்தியத்திலிருந்து நேற்றும் ஒரு பெண்ணின் சடலம் மீட்கப்பட்டது.

உருக்குலைந்து துர்நாற்றம் வீசிய நிலையில் இச்சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இதற்கிடையில் நேற்று முன்தினம் குருநகரில் கண்டெடுக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டிருந்த பெண்ணின் சடலம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

வல்வெட்டித்துறை கம்பர்மலையைச் சேர்ந்த கு. குணேஸ்வரி (வயது 47) என்பவரது சடலமே அது என இனங்காணப்பட்டுள்ளது.

யாழ். கடலேரியில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற படகு விபத்தில் இறந்தவர்களில் இவரும் ஒருவராவார்.

இவருடன் இச் சம்பவத்தில் இறந்த இருவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

நேற்று ஒப்படைக்கப்பட்ட சடலம் அடையாளம் காணும் பொருட்டும் மரண விசாரணையின் பொருட்டும் யாழ். ஆஸ்பத்திரியின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (இ-6-15)

## யாழ். மாநகர சபையின் தீர்மானங்கள் வாஜ்பாயிடம் இன்று கையளிக்கப்படும்

யாழ்ப்பாணம், ஜூலை 30

சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் இலங்கை இனப்பிரச்சினை தீர்வுக்கான அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் எனவும் ஈழத்தமிழர் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான கடமையையும் பொறுப்பையும் வலியுறுத்த வேண்டும் எனவும் யாழ். மாநகரசபையால் எடுக்கப்பட்ட தீர்மானம் இன்று கொழும்பில் வைத்து இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்தத் தீர்மானம் இன்று கொழும்பு செல்லும் யாழ். மாநகர மேயர் பொன் சிவபாலன் மூலம் இந்தியத் தூதரகம் ஊடாக இந்தியப் பிரதமரிடம் கையளிக்கப்படும்.

நேற்று நடைபெற்ற யாழ். மாநகரசபைக் கூட்டத்தில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழ மக்கள்ஜனநாயக கட்சிஆகிய கட்சிகளால் இது தொடர்பான பிரேரணை கொண்டு வரப்பட்டது.

நேற்று நண்பகல் 12 மணி

(10 ஆம் பக்கம் பார்க்க)

## வாஜ்பாய் - ஷெரீப் 90 நிமிடம் சந்திப்பு

கொழும்பு, ஜூலை 30

இலங்கையில் நடக்கும் சார்க் மாநாட்டில் பங்குபற்ற வந்துள்ள இந்தியப் பிரதமர் வாஜ்பாய்க்கும், பாகிஸ்தான் பிரதமர் நவாப் ஷெரீப்புக்கும் இடையில் நேற்று மாலை 90 நிமிட நேரம் பேச்சுக்கள் இடம் பெற்றன.

தாஜ்சமுத்திரா ஹோட்டலில் இருவரும் தனியாகச் சந்தித்து இரு முக்கிய விடயங்கள் குறித்துப் பேசினர்.

அணு ஆயுதம் பாவித்தல், காஷ்மீர் விவகாரம் ஆகிய இரு விடயங்கள் குறித்தும் இரு பிரதமர்களும் மனம் திறந்து சிநேக பூர்வமாகப் பேசினர் எனத் தெரிவிக்கப்பட்டது.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கைதிகள் விடுதலை விடயத்தில் ஈ. பி. டி. பி. யின் முயற்சி தொடரும்

### டக்ளஸ் தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை30

"சிறையில் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை விடுதலை செய்விப்பதற்கான எமது முயற்சிகள் என் மீதான தாக்குதலால் பாதிக்கப்பட மாட்டா"

இவ்வாறு ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

களுத்துறை சிறைச்சாலையில் தாக்குதலுக்குள்ளான பின்னர் வெளிநாட்டில் சிகிச்சை பெற்று கொழும்பு திரும்பி தமது அரசியல் பணிகளை ஆரம்பித்துள்ள அவர் தமது கையொப்பத்துடன் நேற்று வெளியிட்ட கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

(10 ஆம் பக்கம் பார்க்க)

## நரம்பியல் நிபுணருக்கு பேராசிரியர் பதவி வழங்க ஆணைக்குழு மறுப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 30

நரம்பியல் நிபுணர் டாக்டர் வி. குணானந்தனுக்குப் பேராசிரியர் பதவி வழங்க யாழ். பல்கலைக்கழக மூதவை செய்த சிபார்சை ஏற்றுக்கொள்ளப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு மறுத்துவிட்டதாகத் தெரியவருகிறது.

அனுபவம் மிக்க சிறந்த நரம்பியல் நிபுணரான டாக்டர் வி. குணானந்தன், பொது அறுவைச் சிகிச்சையிலும், நரம்பியல் அறுவைச் சிகிச்சையிலும் எவ். ஆர். சி. எஸ். பட்டங்களைப் பெற்றதுடன் நரம்பு நோயியல் துறையில் கலாநிதிப் பட்டமும் பெற்றவராவார்.

வெளிநாடுகளில் நரம்பியல் மருத்துவம் தொடர்பாகப்

(10 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம்

### க. பொ. த. (உ/த)வகுப்பு அனுமதி

மேற்படி பாடசாலையில் இவ்வருடத்திலிருந்து க.பொ. த. (உயர்தர) கலை வகுப்புக்கள் நடைபெறுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அனுமதியை வழங்கிய மாகாணக் கல்விச் செயலாளர் சுந்தரம் டிவகலாலா அவர்களுக்குப் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்த அனைவரும் உளப்பூர்வமாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அத்துடன் இதற்கான ஒத்துழைப்பை வழங்கிய கல்வி அதிகாரிகளுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
யா/தொண்டைமானாறு வீ. ம. வி.

(57969)

## நாகம்ஸ்

சுன்னாகம்.

கொழும்பு, வவுனியா, திருகோணமலை போன்ற இடங்களில் உள்ள திரை அரங்கில் மகளிர் ஆசனங்கள் நிரம்பி வழிந்து வசூலாக ஓடிய படம்.

அரவிந்தசாமி - ரோஜா
நடித்த
**ரோஜா**
திரைப்படக் கூட்டுத்தாபன (ரீல்ஸ்) படம்.
இனிய பாடல்கள் நிரம்பியது
காட்சிகள்:- 10-30, 2-30
(57965)

# இந்து அமைப்புக்கள் வாஜ்பாயிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 30

இலங்கையில் தொடரும் போரை உடனடியாக நிறுத்தி இனப்பிரச்சினைக்கு பேச்சு வார்த்தை மூலம் நீதியானதும், கௌரவமானதுமான தீர்வு ஒன்றைக் காணுமாறு இலங்கை அரசாங்கத்தை வற்புறுத்துமாறு இந்தியப் பிரதமர் வாஜ்பாயிடம் இந்து அமைப்புகள் கோரியுள்ளன.

கொழும்பு வந்துள்ள இந்தியப்பிரதமருக்கு இலங்கைக்கான இந்தியத் தூதுவர் ஊடாக இந்துசமயப்பேரவையும், இந்து குருமார் ஒன்றியமும் அனுப்பியுள்ள 'பக்ஸ்' செய்தியிலேயே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடன் நீண்ட தொடர்புகொண்டுள்ள எமது பிரச்சினையை தீர்த்துவைக்க வேண்டிய பங்கு இந்தியாவுக்கு உண்டு. இனப்பிரச்சினை விடயத்தில் தனது பங்களிப்பை வழங்கி நிரந்தரமான அமைதியான தீர்வு காண உதவ வேண்டும் என்று அந்த அமைப்புக்கள் கேட்டுள்ளன.

இந்து ஆலயங்களின் புனரமைப்பு உட்பட பலவிடயங்கள் அந்த 'பக்ஸ்' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## இதய அஞ்சலி

மில்க்வைற் தொழில் அதிபரும், சிவதர்ம வள்ளலும், எமது நிலைய நீண்டகாலப் போஷகரும் ஆகிய

### கலாநிதி க. கனகரராசா J. P.

22 — 07 — 98 இல் சிவபதமெய்தியமை மக்களுக்கும் எமது நிலையத்திற்கும் பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நல்லைக் கந்தன் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நல்லூர் முருகன் சனசமூக நிலையம்

செட்டித் தெரு,
நல்லூர்.

(57966)

## லிபேட்டி தியேட்டர்

அச்சுவேலி.

இன்று மட்டும்
விஜயகாந்த் - ரேவதி
**வைதேகி காத்திருந்தாள்**
அனேக ரசிகர்களின் வேண்டுகோளுக்கிணங்க
வெள்ளி, சனி
கமல் - ரஜனி - ஸ்ரீதேவி
நடித்த
**மூன்று முடிச்சு**
நேரம்:- 10-30, 2-30
(பழைய நேரம்)
Tele. No. 070 - 212223
(57502)

## சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

### வரிவசூலிப்பாளருக்கான விண்ணப்பம்

கொடிகாமம் சந்தையில் வரிவசூலிப்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் 25 – 40 வயதுக்கு இடைப்பட்டவர்களிடமிருந்து கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் யாவும்

தலைவர்,
சாவகச்சேரி பிரதேச சபை, கொடிகாமம்

என முகவரியிட்டு பதிவுத்தபால் மூலம் 10-08-98 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னதாகவோ கிடைக்கும்படி அனுப்புதல் வேண்டும்.

தகைமைகள்:

1. விண்ணப்பதாரர் கச்சாய் உபபணிமனை எல்லைக்குட்பட்டவராக இருத்தல் வேண்டும்.
2. தேகாரோக்கியம் உள்ளவராகவும், வரிவசூலிப்பதில் ஆற்றல் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.
3. மேலதிக விவரங்களை சாவகச்சேரி பிரதேச சபை தலைமைப் பணிமனையில் அலுவலக நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

அன்ரன் பொன்னையா
தவிசாளர்

சாவகச்சேரி பிரதேச சபை,
கொடிகாமம். 28-07-98

(சி/4428)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.

கமல் (இரு வேடம்)
மொனிஷா, சுகன்யா, கவுண்டமணி, செந்தில்
நடித்த
**இந்தியன்**
தினசரி
10-30 — 2-00, 5-00
(புதிய நேரம்)
(சி/4336)

## A/L 2000

இணைந்த கணிதம்
(பகுதி)
**நிலையியல்**
ஆரம்பம்: 01-08-98
(சனி 7-30 a. m.)
A. பத்மநாதன்
NEW SCIENCE COLLEGE
JAFFNA.
(55464)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கந்தையா சின்னராசா கமலம்மா

வண்ணார் பண்ணை மேற்கைச் சேர்ந்த திருமதி கந்தையா சின்னராசா கமலம்மா 29-07-98 இல் காலமானார்.

அன்னார் கந்தையா சின்னராசாவின் அன்பு மனைவியும், பஞ்சலிங்கம், கனகலிங்கம், செல்வரத்தினம் (சைக்கிள் திருத்துநர், நாச்சிமார் கோயிலடி), மல்லிகாதேவி, காலஞ்சென்ற வசந்தாதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், பொ. நடராசா (சின்னராசா, அம்பாள் லொறி உரிமையாளர்), பேபி அம்மா, மல்லிகாதேவி, சித்திரா, லோகநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் இன்று (30-7-98) காலை 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுகின்றோம்.

தகவல்:
சி. செல்வம் (மகன்)
பொ. சின்னராசா (மருமகன்)

43, வண். மேற்கு,
பெரியதம்பிரான் கோயிலடி.

(57968)

## திருமதி ரஞ்சினி ஜெகநாதன்

பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி ரஞ்சினி ஜெகநாதன் 28. 7. 98 இல் காலமானார்.

அன்னார் தெல்லிப்பழை கிழக்கைச் சேர்ந்த நாகலிங்கம் ஜெகநாதனின் (முன்னாள் களஞ்சியப் பொறுப்பாளர், சிமெந்து கூட்டுத்தாபனம், காங்கேசன்துறை) அன்பு மனைவியும், ஆரணி, முகுந்தினி, ஜனனி ஆகியோரின் பாசமிகு தாயாரும், சறோஜினி, சிவானந்தம், சுவிஸ்), ராகினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கதிர்காமநாதன், தர்மநாதன் (கொழும்பு), தவநாதன் (தலைமைக் காரியாலய கூட்டுறவுப் பரிசோதகர்), லோகநாதன் (புறாணை), சிவநாதன் (கிராம சேவையாளர், துர்க்காபுரம்) ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30-7-98) வியாழக்கிழமை காலை 10. 00 மணியளவில் 13/B, கவுடான பிளேஸ், தெஹிவளையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நா. தவநாதன்

44, சம்பியன் ஒழுங்கை,
கொக்குவில்.

(57964)

## திருமதி தாமோதரம்பிள்ளை மங்கையர்க்கரசி

கரம்பொன், காளிகோயிலடி, ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட மங்கையர்க்கரசி 26 - 07 - 98 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தாமோதரம்பிள்ளையின் அன்பு மனைவியும், இந்திராணி, விஸ்வநாதன் (ஸ்ரீ. லங்கா ரெலிகொம் – மட்டக்களப்பு) லீலாராணி (இந்தியா), மகாதேவன், தனஞ்ஜெயன் (சவூதிஅரேபியா), அவர்களின் அன்புத் தாயாரும், ஜெகநாதன், காலஞ்சென்ற கிருஷ்ணாம்பாள் ஆகியோரின் சகோதரியும், செல்லையா, ரவீந்திரகுமார், யசோதாதேவி, அழகரெட்ணம், சுரேஷ், சுதா, சுதர்ஸன் ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பசுபதி, நாகம்மா, நாகேஸ்வரி ஆகியோரின் மைத்துனியும், நிஷ்யந்தன், துசிக்கா, பானுஜா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30. 7. 98) வியாழக்கிழமை மு. ப 10. 00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் உடுவில் பூவோடை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
தா. விஸ்வநாதன் (மகன்)

காளிகோயிலடி,
அம்பலவாணர் வீதி,
உடுவில்.

(57958)

# நகர சபை, சாவகச்சேரி
## 1998 ஆம் ஆண்டுக்கான மீள் கேள்வி அறிவித்தல்

15-08-1998 தொடக்கம் 31-12-1998 வரையிலான காலப்பகுதிக்குக் கீழ் குறிப்பிடப்படும் தேவைகளுக்கான கேள்விகள் இரு பிரதிகளில் 10-08-1998 ஆம் திகதி முற்பகல் 10-00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| விவரம் | கடை இல. | ஆகக்குறைந்த கேள்வித் தொகை | கேள்வி வைப்பு பணம் | படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 1. ஆட்டிறைச்சி | என்.எம்.எஸ். I | 32,850/- | 1,000/- | 500/- |
| 2. மாட்டிறைச்சி | என்.எம்.எஸ். III | 47,500/- | 1,000/- | 500/- |

மேற்படி வைப்புப் பணம் கேள்விப் படிவக் கட்டணங்களும் செலுத்துவதன் பேரில் 06-08-1998 ஆம் திகதி 12-30 மணிவரை வழங்கப்படும் படிவங்களில் மட்டும் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். கேள்விப் படிவக் கட்டணங்கள் மீளளிக்கப்படமாட்டா. சித்திகரமான கேள்விக்காரர்கள் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டதும் கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படும்.

மேற்படி கட்டணங்கள் இவ்வலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்படவேண்டும். இது சம்பந்தமான ஏனைய விவரங்களை இவ்வலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

மு. செ. சரவணபவ
செயலாளர்,
நகர சபை, சாவகச்சேரி.

நகர சபை அலுவலகம்,
சாவகச்சேரி.
27-07-98

(சி/4427)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரமாக நடமாட அனுமதி கோரி

# காருக்குள் அமர்ந்திருந்தவாறு ஆங் சான் சூகீ போராட்டம்!



ஆங் சான் சூ கீ (1945 இல் எடுக்கப்பட்ட படம்)

## அவரது உடல் நிலை பாதிப்பு

யங்கூன், ஜூலை 30

மியான்மர் (பர்மா) நாட்டு எதிர்க்கட்சித் தலைவரும் மனித உரிமைவாதியுமான ஆங் சான் சூகீ (AUNG SAN SUU KYI) தமது காருக்குள் அமர்ந்திருந்தவாறு 6 ஆவது நாளாக நடத்தி வரும் போராட்டம் காரணமாக அவரது உடல் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது.

இராணுவ ஆட்சியாளர்களால் வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் அவர் கடந்த வெள்ளியன்று தமது ஆதரவாளர்களைச் சந்திப்பதற்காகச் சென்றுகொண்டிருந்த சமயம் யங்கூனில் இருந்து 150 கிலோமீற்றர் தொலைவில் உள்ளஓர் இடத்தில் இராணுவ சோதனை நிலையம் ஒன்றில தடுத்து நிறுத்தப்பட்டார்.

அவர் தொடர்ந்து பயணம் செய்ய இராணுவ அதிகாரிகள் அனுமதி மறுத்தனர், ஆட்சியாளாகள் தம்மீது விதித்த கட்டுப்பாட்டை ஆட்சேபித்து சூகீ அவ்விடத்திலேயே தமது காரில் அமர்ந்துகொண்டார்.

இரவு பகலாக தொடர்ந்து காருக்குள் தங்கியிருந்து தமது ஆட்சேபத்தை வெளியிட்டு வரும் அவரது உடல் நிலை மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாக அவரைப் பரிசோதித்த டாக்டர் தெரிவித்துள்ளார். வெப்பம் காரணமாக ஏற்பட்ட நீரிழப்பால் அவர் உடல் நிலைபாதிக்கப்பட்டிருக்கிறது,

அவரது காருக்கு அருகே இராணுவ அம்புலன்ஸ் ஒன்று தயாராக நிறுத்தப்பட்டிருககிறது.

சுதந்திரமாக நடமாட அனுமதிக்குமாறு கோரி அவர் நடத்தும் இப்போராட்டத்துக்கு இராணுவ அரசு செவி சாய்க்கவில்லை.

ஆங் சான் சூகீயைச் சென்று பார்க்க வெளிநாட்டு ராஜதந்திரிகள் கோரிய அனுமதிகளை இராணுவ அரசு நிராகரித்து விட்டது.


சூகீயின் உடல்நிலை பாதிக்கப்படுவது குறித்து ஐ. நா. மனித உரிமைகள் ஆணையாளர் கவலை தெரிவித்துள்ளார். (ஐ)

ஜனநாயக ஆதரவாளரான சூகீ பர்மாவின் சிற்பி என வர்ணிக்கப்படும் யூ ஆங் சானின் (U Aung San) புதல்வி ஆவார். 1947 இல் அவர் படுகொலை செய்யப்பட்டார்.

மியான்மரில் ஜனநாயக உரிமை கோரி சூகீ நடத்திவரும் போராட்டத்தை இராணுவ ஆட்சியாளர்கள் அடக்கி ஒடுக்கி வருகின்றனர். சூகீயின் நீண்ட கால போராட்டத்தை கௌரவித்து 1991 இல் அவருக்கு நோபல் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது.

1990 மேயில் நடந்த தேர்தலில் சூகீயின் ஜனநாயகத்துக்கான தேசிய லீக் 80 வீதமான நடாளுமன்ற ஆசனங்களை கைப்பற்றியபோது இராணுவம் அத்தேர்தலை நிராகரித்துவிட்டதும்

## மழை வெள்ளத்தில் மிதக்கும் சீனச் சிறுவன்!



பேய்ஜிங், ஜூலை 30

மத்திய சீனாவின் கியூபி மாகாணத்தில் வெள்ளம் சூழ்ந்த தனது வீட்டில் காற்றடிக்கப்பட்ட ரியூப் ஒன்றில் அமர்ந்தவாறு மதிய உணவு அருந்தும் ஒரு சிறுவனைப் படத்தில் காணலாம்.

யாங்சி ஆறு பெருக்கெடுக்கலாம் என்ற பீதியின் காரணமாக லட்சக்கணக்கான சீனப் படை வீரர்களை அரசு தயார் நிலையில் வைத்துள்ளது. (ஐ)

## துணை சபாநாயகர் பதவி வேட்பாளர் நியமனம்

புதுடில்லி, ஜூலை 30

இந்திய மக்களவைத் துணை சபாநாயகர் பதவிக்கு பாரதீய ஜனதா கூட்டணி வேட்பாளராக திருமதி நீற்றா வர்மா நிறுத்தப்படுவதாக நாடாளுமன்றவிவகாரத்துறை அமைச்சர் மதன் லால்குரானா திங்கட்கிழமை அறிவித்தார்.

அதேசமயம் மக்களவைத் துணை சபா நாயகர்தேர்தல் ஒத்தி வைக்கப்படமாட்டாது என்றும்—

நாடாளுமன்ற நடப்புக் கூட்டத் தொடரிலேயே துணை சபாநாயகரைதெரிய அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்றும்—மக்களவை சபாநாயகர் ஜி. எம். சி. பாலயோகி தெரிவித்தார். (இ-ரி)

## பெனாஸீர் பூட்டோ நாடு திரும்பினார்

இஸ்லாமாபாத், ஜூலை 30

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் பெனாஸிர் பூட்டோ ஊழல் குற்றச்சாட்டுக்களுக்காக கைது செய்யப்படுவார் என்ற ஊகங்களுக்கு மத்தியில் நேற்று முன்தினம்வெளிநாட்டில் இருந்து பாகிஸ்தான் திரும்பினார்.

தம்மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை சிறிதுகூட அவர் பொருட்படுத்தவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

தான் கைது செய்யப்படுவேன் என்பது குறித்தும் பயப்படவில்லை. நாட்டின் தற்போதைய பிரச்சினையில் எனது கைது முக்கியமானது அல்ல. எனக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றஞ்சாட்டுகள் மக்களைத் திசை திருப்பும் முயற்சி.

இப்படி பெனாஸிர் பூட்டோகூறினார். (இ-8)

## இருவருக்கு எய்ட்ஸ்

புறக்கோட்டை தனியார் மருத்துவமனை ஒன்றில் இரத்தம் பரிசோதனை செய்த இருவருக்கு 'எய்ட்ஸ்' தொற்றியிருப்பது கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## இந்தியாவில் வெள்ள அழிவுகள்

புதுடில்லி, ஜூலை 30

இந்தியாவின் வடக்கு மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் கடும்மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள நிலைமை ஆபத்தான கட்டத்தை அடைந்திருக்கிறது. முக்கிய ஆறுகளில் நீர் மட்டம் அபாய அளவை தாண்டி விட்டது.

அஸாமில் வெள்ளம் காரணமாக இறந்தோரின் எண்ணிக்கை 85 ஆக உயர்ந்துள்ளது. பீகாரில் 25 பேர் பலியாகினர்.

மேற்கு வங்கத்தில் கங்கை ஆற்றின் கரையில் ஏற்பட்ட உடைப்பின் காரணமாக பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

உத்தரப்பிரதேசத்தில் மழையால் வீடுகள் இடிந்து 6 பேர் உயிரிழந்தனர். (ஐ)

உலக அரங்கில்

## ஜெயின் அறிக்கை நாளை சமர்ப்பிப்பு!

புதுடில்லி ஜூலை 30

ராஜீவ் காந்தி கொலைச் சதி தொடர்பாக விசாரணை நடத்திய ஜெயின் ஆணைக் குழுவின் அறிக்கை நாளை வெள்ளிக்கிழமை இந்திய நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

ஜெயின் அறிக்கை மற்றும் நடவடிக்கை அறிக்கை என்பன தொடர்பான விவாதம் எதிர்வரும் 4ஆம், 5ஆம் திகதிகளில் நடைபெறும் என்று நாடாளுமன்ற விவகார அமைச்சர் மதன்லால் குரானா தெரிவித்தார். (ஐ)

## பங்களாதேஷ் வெள்ள மயம்

டாக்கா, ஜூலை 30

பங்களாதேஷில் கடும்மழை வெள்ளப் பெருக்கால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 115 ஆக உயர்ந்துள்ளது. லட்சக்கணக்கான மக்கள் பாதிக்சப்பட்டுள்ளனர். நாட்டின் 64 நிர்வாக மாவட்டங்களில் 36 மாவட்டங்கள் வெள்ளத்தால் சூழப்பட்டுள்ளன.

சுமார் இரண்டு லட்சத்து 50 ஆயிரம் ஹெக்டேயர் பரப்பில் விளைநதிருந்த நெற் பயிர்கள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. (ஐ)

## பாரதீய ஜனதாவுக்கு தி. மு. க. ஆதரவா?

### முரசொலிமாறன் மறுப்பு

புதுடில்லி, ஜூலை 30

மத்தியில் பாரதீய ஜனதா அரசுக்கு ஆதரவளிக்க தி.மு.க. சமிக்ஞை வெளியிடிருப்பதாக வெளியாகியுள்ள செய்திகளை தி.மு.க வின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரும், முன்னாள் அமைச்சருமான முரசொலி மாறன் அடியோடு மறுத்துள்ளார்.

தமிழகத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசைக் கலைப்பதில்லை என உறுதி மொழி அளிக்கப்பட்டால் மத்தியில் பாரதீய ஜனதாக் கட்சிக்கு நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் அதைக் காப்பாற்ற தி. மு. க. ஆதரவளிக்கும் என்ற வகையிலான சமிக்ஞைகளை தி. மு. க. புதுடில்லிக்குத் தெரியப்படுத்தியுள்ளதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன.

முன்னாள் அமைச்சர் முரசொலி மாறன் ஊடாக இந்த சமிக்ஞை விடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ஐ)

## கழுத்துப்பட்டி அணிவது அடிமைத்தனம்!

புதுடில்லி, ஜூலை 30

இந்தியாவில் தயாரிக்கப்படும் துணிவகைகளை அணியுமாறு இந்துதேசிய வாதிகள் பாடசாலை மாணவர்களை வற்புறுத்தி வருவதாக 'ரைம்ஸ் ஒவ் இன்டியா, பத்திரிகை செய்தி தெரிவித்துள்ளது.

அரைப் பாவாடை, கழுத்துப்பட்டி என்பன 'அடிமைச் சின்னங்கள்.' எனவே அவற்றை தவிர்க்குமாறு புதுடில்லியில் உள்ள பாடசாலை மாணவ, மாணவியர்கள் கேட்கப்பட்டுள்ளனர்.

பெண்கள் பாரம்பரியமான நீண்ட மேலாடையும், இறுக்கமில்லாத காற்சட்டைகளையும் அணிய வேண்டும். ஆண்கள் தங்கள் சேட்டை முழுக்கையையும் மூடுமாறு அணியவேண்டும்— என்று கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். (ஐ)



நொம்பென், ஜூலை 30

'கெமரூச்' கெரில்லாக்கள் நடத்திய தாக்குதலில் பலியான சக சிப்பாய் ஒருவரை கம்போடிய அரச படை வீரர்கள் இருவர் சுமந்து செல்கின்றனர்.

பொதுத் தேர்தல் வாக்களிப்பு ஆரம்பமாவதற்கு சிறிது முன்னராக நடத்தப்பட்ட இத்தாக்குதலில் 7 பொதுமக்களும் உயிரிழந்தனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலாநிதி காரை செ. சுந்தரம்பிள்ளை

M.PHIL., Ph. D.

(ஓய்வுபெற்ற அதிபர், ஆசிரியகலாசாலை, கோப்பாய்)

# மணி விழாச் சிறப்புமலர்

(கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் இன்று நடைபெறும் மணிவிழாவையொட்டி இச்சிறப்பு மலர் வெளியாகின்றது.)

## காரைநகர் தந்த கற்பகதரு

காரைநகரில் காலத்துக்குக் காலம் அறிஞர்கள், கவிஞர்கள், கலைஞர்கள் தோன்றி நாட்டுக்கும மக்களுக்கும் அளப்பரிய சேவைகள் செய்திருக்கிறார்கள். அவர்களுள் கலாநிதி செ. சுந்தரம்பிள்ளையும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இவரின் முன்னோர் கவிஞர்களாகவும், நடிகர்களாகவும், நாடக ஆசிரியர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இவரின் பேரனார் காரைநகர்க் கார்த்திகேயப் புலவரின் உத்தமமாணாக்கர் ஆவார். தகப்பனார் ஈழத்துச் சிதம்பரத்தில் பல ஆண்டுகள் தங்கியிருந்துபெரும் பணியாற்றியவர்; புண்ணிய சீலர்; சிவசம்பாத்தியமுடையவர். இத்தகைய பின்னணியிலே தோன்றிய கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை பேரறிஞராகத் திகழ்வதிலும், புகழ் இவரைத் தேடி வழிவினாவிச் செல்வதிலும் வியப்பேதும் இல்லை.

இவர் தமிழ், சமஸ்கிருதம், ஆங்கிலம், பாளி ஆகிய மொழிகளிற் பாண்டித்தியமுள்ளவர். வியாகரணசிரோமணி கி. சீதாராமசாஸ்திரிகளிடம் சமஸ்கிருதத்தையும், வித்துவான் க. வேந்தனார், பேரறிஞர் கந்த முருகேசனார் என்போரிடம் தமிழையும் பழைய வரலாற்று முறையில் நன்கு கற்ற இவர் லண்டன் பல்கலைக்கழகக் கலைப்பட்டதாரியுமாவார்.

கலாநிதி செ. சுந்தரம்பிள்ளை, பல நூல்களின் ஆசிரியர்; தரமான கவிஞர்; சிறந்த பேச்சாளர்; கவர்ச்சி மிக்க நடிகர்; நாடகத்துறையில் முத்திரை பதித்தவர்; ஆற்றல் மிக்க மொழிபெயர்ப்பாளர்; சைவ சித்தாந்த நூல்களை நன்கு கற்றவர்; சிறந்த ஆசிரியர்; ஆளுமையுள்ள அதிபர்; அகில இலங்கைக் காப்பியப் போட்டியிலும், கவிதைப் போட்டியிலும் முதற் பரிசு பெற்றவர்; ஐந்து முறை இலங்கைச் சாகித்திய மண்டலப் பரிசு பெற்ற பெருமைக்குரியவர்; வசதி குறைந்த மாணவர்களுக்குப் பணவுதவியும், பிற உதவிகளுஞ் செய்து அவர்களைக் கற்க வைத்த கண்ணியவான். இத்தகைய சிறப்புக்களெல்லாம் அமையப் பெற்ற இவரைக் கற்பகதருவுக்கு ஒப்பிடுவது மிகையாகாது. இவரிடமிருந்து தமிழுலகம் மேலும் பல ஆக்கங்களை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது.

இவர் நீண்ட ஆயுள் பெற்றுவாழ [illegible]ழ்த்துகின்றோம்.

க. வைத்தீசுவரக் குருக்கள்
தலைவர்
காரைநகர்த் தமிழ் வளர்ச்சிக் கழகம்

## கலாசாலை அதிபர் வாழ்த்து

தங்களிடம் தமிழ் கற்று, தேர்ந்த,
கலை பயின்ற, இந்து நாகரிகம் படித்த
எண்ணரும் ஆசிரியரும் ஏனையோரும்
ஈழத்தில் எங்கும் உள்ளனர். இவர்கள்
உங்கள் பெயரை எங்கும் போற்றி
இனிது வாழ வைப்பர்.
நீவிர் மகிழ்வுடனே பல செல்வமும் பெற்று
வாழ்க தங்களது ஆயுள் அளபெடைபோல்
தரணியிலே நீள்க ஈழத்துச் சிதம்பரனார்
அருள்பெற்று என்றும் வாழ்க!

மு. பரஞ்சோதி

## மணிவிழா நாயகர் பற்றிய முக்கிய குறிப்புகள்

பிறப்பு: களபூமி காரைநகர் 20 - 05 - 1938
தாய் தந்தையர்: செல்லர் தங்கம் தம்பதியர்

கல்வி: ஆரம்பக்கல்வி: காரைநகர் ஊரி த. வி.
இடைநிலைக் கல்வி: புனித அந்தோனியார் கல்லூரி, ஊர்காவற்றுறை.
உயர் நிலை: விக்ரோறியாக் கல்லூரி, சுழிபுரம்.
அக்குவேனஸ் பல்கலைக் கழகக் கல்லூரி, கொழும்பு

கல்வித் தகைமைகள்: B. A. (Lond), M. Ed. (Colombo), M. Phil (Colombo), Ph. D. (Jaffna)

தொழில்தகைமைகள்: TEACHER COUNCELLER CERTIFICATE Dip-in-Ed., Dip-in-Drama & Theatre Arts (Colombo)

சேவை விவரம்: ஆசிரியராக 17 வருடங்கள்.
அதிபராக காரைநகர் இந்துக் கல்லூரி
விரிவுரையாளராக பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை, தலவாக்கெலை பயிற்சிக் கலாசாலை.
ஆசிரியர் கலாசாலை அதிபராக தலவாக்கெலை
ஆ. ப. க. கோ. ஆ. ப. க

இடைவரவு விரிவுரையாளராக:
யாழ். பல்கலைக்கழகம் (நாடகமும் அரங்கியலும்)
திறந்த வெளிப் பல்கலைக்கழகம் (உளவியல்)
யாழ்ப்பாணக் கல்லூரி (இந்து நாகரிகம்)
37 வருட சேவையுள் 15 வருடங்கள் கல்வி நிருவாக சேவையும் அடங்கும்.

எழுதி வெளியிட்ட நூல்கள்:

- ★ தேனாறு, சங்கிலியம், தவம், உறவும் துறவும், பாதை மாறியபோது, காவேரி ஆகிய கவிதை நூல்கள்.
- ★ ஈழத்து இசை நாடக வரலாறு, இந்து நாகரிகத்தில் கலை
- ★ நடிகமணி வி. வி. வைரமுத்துவின் வாழ்வும் அரங்கும். சிங்களப் பாரம்பரிய, அரங்கம் ஆகிய ஆய்வு நூல்கள்.

பரிசில்களும் விருதுகளும்:

- ★ மேற்படி நூல்களுள் 5 நூல்கள் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசு பெற்றவை.

அகில இலங்கை கவிதைப் போட்டிகளில் 3 தடவை தங்கப் பதக்கம் பெற்றமை, ஈழநாடு நடத்திய காவியப் போட்டியில் முதற் பரிசு பெற்றமை.

விசேட திறமைகள்:

நடிகர், நாட்டுக்கூத்து ஆட்டக்காரர். நாடகத் தயாரிப்பாளர் தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அழகாகப் பேச வல்லவர். சிறந்த நிருவாகி.

மலர் அமைப்பு:

**ந. கணேசமூர்த்தி**
மணிவிழாக்குழு சார்பில்

## ஆசிரிய நேயம் மிகுந்தவர்

1951 — 98 சுமார் அரைநூற்றாண்டுகள் சென்றுவிட்டன. நடுத்தர வகுப்பு மாணவனாக, பட்டப்படிப்பு சமஸ்கிருத வகுப்பு சகமாணவனாக, ஆசிரியனாக, நண்பனாக சுந்தரம்பிள்ளையின் வளர்ச்சியைக் கண்ணுற்று மகிழ்ந்திருக்கிறேன். ''தம்மில் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து மன்னுயிர்க்கு எல்லாம் இனிது'' என்ற உணர்வை அனுபவித்தேன். வகுப்பில் வெகு அடக்கமாயிருந்து, தன் திறமையைக் காட்டமுயலாதிருந்தாலும், மாணவர் தமிழ்ச் சங்கக் கூட்டங்களில நன்கு பிரகாசித்தார். இளமை அனுபவக்குறைவால் தெரிந்தது எல்லாவற்றையும் மாணவர் முன் கொட்டிவிடுகிறவன் என்று சக ஆசிரியர்கள் குறைசொன்னாலும், அதனால் பெரும்பயனும் விளைந்துள்ளது என்பதற்கு சுந்தரம்பிள்ளையின் ஆசிரிய நேயம் எடுத்துக்காட்டு. நான்படிப்பித்த ஒரே பாடமாகிய வரலாற்றில் காதல் மிகுந்து. அதை வாழ்நாள் முழுதும் பயன்படுத்தினார். பட்டப்படிப்புடன் நிறுத்திவிடாது, கலைவரலாறுகள் எழுதும் அளவுக்கு அதனை வளர்த்துக் கொண்டார். என்னிடம் இலக்கியம் படிக்காவிடினும், வகுப்பில் இறுதி ஐந்து நிமிடமேனும் நான் படித்துச் சுவைத்த நூல்களை அறிமுகப்படுத்தும் வழக்கத்தால், தனக்கு இலக்கிய ஆர்வம் வளர்ந்ததாக அவை நடுவே என்னைப் பாராட்டத்தவறமாட்டார்.

ஆ. சபாரத்தினம்
[காவல்நகரோன்]

## கல்விப் பணிப்பாளர் வாழ்த்துகிறார்

எனது நீண்ட கால நண்பன் கலாநிதி காரை. செ. சுந்தரம் பிள்ளையின் மணிவிழாவில் அவரை வாழ்த்தி மகிழ்ச்சி அடைகிறேன். காரை நாடறிந்த சிறந்த கவிஞன், கல்விமான், கலைஞன். கவிதைத்துறையிலே அவரது நீண்டகால உழைப்புச் செறிந்து செழித்துள்ளது. தனிக் கவிதைகள், காவியங்கள், நாட்டிய நாடகங்கள், இசை நாடகங்கள் எனப் பலப்பல எழுதியுள்ளார். மொழி, கலை, கலாசாரம், பண்பாடு, நாடகம் ஆகிய துறைகளில் பல அரிய ஆராய்ச்சி நூல்களை வெளியிட்டுள்ளார். சாகித்திய மண்டலப் பரிசில்கள் பல பெற்றவர். நாட்டுக் கூத்து, இசை, நாடகம் ஆகியவற்றில் இவருக்கு அலாதியான விருப்பம். நடிகமணி வைரமுத்துவின் இசை, நாடக வெற்றியில் இவருக்கும் கணிசமான பங்கு உண்டு. பல நாடகங்களை எழுதித் தயாரித்து நடித்திருக்கும் இவரது பணி பல்லாண்டு தொடர வாழ்த்துகிறேன்.

நா. சுந்தரலிங்கம்
கல்விப் பணிப்பாளர்—வலயம் 1

மணிவிழா சிறப்புற வாழ்த்துவோர்:

சுபமுகூர்த்தப் பட்டுப் பருத்திப் புடைவைகளின் கண்கவர் உலகம்
**சீமாட்டி புடைவைக் கடல்**
122, மின்சாரநிலைய வீதி, யாழ்.

தரமான ஜவுளிகளின் தனிப்பெரும் நிறுவனம்
**சிவகணேசன் ஸ்ரோர்ஸ்**
41, பெரியகடை, யாழ்ப்பாணம்.

தரமான புடைவைகளின் மொத்த சில்லறை வியாபார நிறுவனம்
**மலர் புடைவை அகம்**
18 [67A], பெரியகடை, யாழ்ப்பாணம்.

**ச. வி. முருகேசு**
இல. 154, ஆஸபத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**குகன் ஸ்ரோர்ஸ்**
180 [380], ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**பூபாலசிங்கம் புத்தகசாலை**
இல. 4, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

**மகாலக்ஷ்மி ஸ்ரோர்ஸ்**
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**LIONAIR**
TICKTING & CARGO
37, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel. 021 - 2028
135, வொல்பண்டல் வீதி, கொழும்பு - 13.
Tel. 435779 331760

**வெங்கடேஸ்வரா**
79, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**கல்யாணி கிறீம்ஹவுஸ்**
73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**மதுரா நகைமாடம்**
59, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

**இளவரசி ரெக்ஸ்ரைல்ஸ்**
57, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

**ஜி. எஸ். லிங்கநாதன் அன் கோ**
13, 14, பெரியகடை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. மேற்கில் 2,700 பேர்
# அ. அட்டை பெறவில்லை

வலிகாமம்மேற்கு ஜூலை,30
வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவில் சுமார் 2 ஆயிரத்து 700 பேர் தேசிய அடையாள அட்டைகள் இல்லாமலும் —
சுமார் ஆயிரத்து 400 பேர் விசேட அடையாள அட்டைகள் இல்லாமலும் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

பிரதேச செயலர் கா. சந்திரராசா கிராம உத்தியோகத்தர் பிரிவு ரீதியாக மேற்கொண்ட ஆய்வின் போது இத் தகவல்கள் தெரியவந்துள்ளன.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவிலுள்ள 25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் பிரதேச செயலரின் பணிப்பின் பேரில் கிராம உத்தியோகத்தர்கள் மேற்கொண்ட ஆய்வின் போது தேசிய அடையாள அட்டைகள், விசேட அடையாள அட்டைகள் பெறுவதற்கு தகுதியிருந்தும் இவர்கள் அவற்றைப் பெற்றுக் கொள்ளாமல் இருப்பது தெரிய வந்துள்ளது.

25 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளையும் நான்கு வலயங்களாகப் பிரித்து அடுத்த மாத நடுப்பகுதியில் நடமாடும் பிரதேச செயலகத்தை சனிக்கிழமை தோறும் நடத்தி இவர்களுக்கு அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்யப்படவுள்ளது.

(ஐ-175)

## வடமராட்சியில்
## கத்தோலிக்க ஆசிரியராக ஆறு பேர் நியமனம்

வடமராட்சி, ஜூலை 30
பருத்தித்துறைப் பகுதியிலுள்ள ஆறுபாடசாலைகளுக்கு கத்தோலிக்க சமய பாடம் கற்பிப்பதற்கு தொண்டர் சேவை அடிப்படையில் ஆறு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, புலோலி றோமன் கத்தோலிக்க வித்தியாலயம், தும்பளை சிவப்பிரகாச மகா வித்தியாலயம் ஆகிய ஆறு பாடசாலைகளுக்குமே இவ்வாறு கத்தோலிக்க பாடம் போதிக்க ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர்.

இப்பாடசாலைகளில் கத்தோலிக்க சமய பாடம் போதிக்க ஆசிரியர்கள் இன்மையால், அதனை நிறைவு செய்ய கத்தோலிக்க ஆசிரியர்களை சேவைக்குஅமர்த்த உதவுமாறு இப் பாடசாலைகளின் அபிவிருத்திச் சங்கங்கள் பருத்தித்துறை பங்குத் தந்தை அருட்திரு பி. எம். இம்மானுவேல் அடிகளாரிடம் கேட்டிருந்தன.

இதனையடுத்து கத்தோலிக்க வேதாகமங்ளை கற்றுத் தேர்ந்த ஆறு ஆசிரியர்களை தொண்டர் அடிப்படையில் சேவையாற்ற பருத்தித்துறை பங்குத் தந்தை ஏற்பாடு செய்து உதவியுள்ளார்.

(ஐ-173)

## ரூ. 5 ஆயிரம் கொடுப்பனவு:
## வங்கிகளுக்கு வீணாக அலைய வேண்டாம்!
### மக்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூலை 30
கிராம சேவையாளர்கள் மூலம் வெளியிடப்படும் பெயர்ப்பட்டியலில் தமது பெயர் இடம்பெற்றுள்ளதா என்பதை உறுதிப்படுத்திய பின்னரே மீளக்குடியமர்விற்கென வழங்கப்படும் ரூபா 5 ஆயிரத்தைப்பெற பொது மக்கள் வங்கிகளுக்குச் செல்லல் வேண்டும்.

யாழ். பிரதேச செயலகம் விடுத்த செய்திக் குறிப்பில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
மீளக்குடியமர்விற்கென வழங்கப்படும் 5 ஆயிரம் ரூபாவை பெறுவது தொடர்பாக கிராம அலுவலரின் அலுவலகத்திற்குச் சென்று உரிய விண்ணப்பப்படிவத்தில் முத்திரை ஒட்டி கையொப்பம் வைத்தவுடன் வங்கிகளுக்குச் செல்லக் கூடாது.

முத்திரை ஒட்டி கையொப்பம் வைத்து ஒரு சில வாரத்திற்குப் பின்னர் கிராம சேவகர்களின் அலுவலகத்தில் கொடுப்பனவு பெறுவோரின் பெயர் விவரங்கள் மற்றும் கொடுப்பனவு வழங்கப்படும் திகதி என்பன விளம்பரப் படுத்தப்பட்டிருக்கும்.

அதன் பின்னரே கொடுப்பனவைப் பெற பொதுமக்கள் வங்கிகளுக்குச் செல்ல வேண்டும்.

இந்தநடைமுறையைப் பின்பற்றினால் பொதுமக்கள் வீண் அலைச்சலைத் தவிர்த்துக் கொள்ளலாம் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7)

## சங்கானைக் கடைகளில் திடீர்ப் பரிசோதனை

வலிகாமம்மேற்கு, ஜூலை30
சங்கானைப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் திடீர் பரிசோதனைகள் நடத்தப்பட்டு பாவனைக்கு உதவாத உணவுப்பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டு மக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

சங்கானை சுகாதாரப் பரிசோதகர்கள் நடத்திய இத் திடீர்ப்பரிசோதனையின் போது பாவனைக்கு உதவாத டின்மீன்கள், உள்ளூர் தயாரிப்புக்களான அப்பளம், டொபி, மோர்மிளகாய், தேயிலை ஆகிய பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன.

இவற்றை பறிமுதல் செய்த சுகாதாரப் பரிசோதகர்கள் மக்கள் முன்னிலையில் வைத்து அவற்றை அழித்தனர்.

(ஐ-175)

## போலியோ தடுப்பு தினம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
தேசிய போலியோ தடுப்பு தினம் வழமை போல் இம்முறையும் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 19, ஒக்ரோபர் 24 ஆகிய திகதிகளில் நாடெங்கும் போலியோ தடுப்பு தினம் அனுஷ்டிக்கப்படும்.

இந்த இரு தினங்களிலும் 5 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு போலியோ தடுப்பு மருந்து கொடுக்கப்படவுள்ளது.

போலியோ தடுப்பு தினம் தொடர்பான கூட்டமொன்று எதிர்வரும் 31ஆம் திகதி கொழும்பில் நடைபெறும்.

இக்கூட்டத்தில் சுகாதார சேவைகள் மாகாண பிரதிப் பணிப்பாளர் டாக்டர் கா. த. சிவபாதம் கலந்து கொள்வார்.

(5-ரி)

## தெய்வீக இசையரங்கு

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி இளங்கலைஞர் மன்றம் நடத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று — துர்க்கா தேவி மணி மண்டபத்தில்— பிற்பகல் 5-30முதல் 7-00மணி வரை யசோதா ஸ்ரீகுமாரனின் இசைக்கச்சேரி நடைபெறும்.

நாளை வெள்ளிக்கிழமை ரீ. கருணாகரனின் இசைக் கச்சேரி இடம்பெறும். தினமும் துர்க்காதேவி மகளிர் இல்ல மாணவிகளின் திருமுறை ஓதலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகும். (ஐ-8)

## தாச்சிப் போட்டி

வலிகாமம்தெற்கு, ஜூலை30
யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச்சங்கம் மாவட்டரீதியில் நடத்தும் தாச்சிச் சுற்றுப்போட்டிகள் கடந்த 25 ஆம் திகதி முதல் இணுவில் சந்தை மைதானத்தில் நடைபெற்று வருகின்றன.

தாச்சி நடுவர்சங்கத் தலைவர் எஸ். இலகுநாதன் கொடியேற்றிப் போட்டிகளை ஆரம்பித்து வைத்தார்.

(ஐ-152)

## அதிபர் பதவிக்கு விண்ணப்பம்

வடமராட்சி, ஜூலை30
உடுத்துறை மகா வித்தியாலயத்தில் அதிபர்பதவிக்கு மருதங்கேணி கல்விக் கோட்டம் விணணப்பங்களைக் கோரியுள்ளது.

அதிபர் சேவை, ஆசிரிய சேவையில் உள்ளவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம் என மருதங்கேணி கல்விக் கோட்ட பிரதிக்கல்விப் பணிப்பாளர் வி. அருளானந்தம் தெரிவித்துள்ளார்.

(ஐ-173)

## சிறுவன் காயம்

யாழ்ப்பாணம் ஜூலை 30
ஓடிக்கொண்டிருந்தலான்ட் மாஸ்ரரில் இருந்து தவறி விழுந்து சிறுவன் காயமடைந்தான்.

அச்சுவேலி தோப்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இச் சம்பவத்தில் அருமைத்துரை அருள்ரமல் (வயது 13) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15-189)

# செய்திக் கொத்து

### மலத்தியோன் விசுறும் பணி தாமதம்

யாழ்ப்பாணம், ஜூலை 30
யாழ். மாநகரசபை வைத்திய அதிகாரி பிரிவில் இதுவரை இரண்டு பிரிவுகளாக இயங்கி வந்த மலத்தியோன் விசிறும் பிரிவுகளில் தற்போது ஒரு பிரிவு மாத்திரமே இயங்கி வருகிறது.

இதனால் மலத்தியோன் விசிறும் வேலைகளை முழுமையாகச் செய்ய முடியாத நிலை இருந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (இ-15)

### பொதுக் கிணறுகள் புனரமைப்பு

சுதுமலை, ஜூலை 30
சண்டிலிப்பாய் பிரதேச சபையின் கீழ் உள்ள 37 பொதுக்கிணறுகள் புனரமைக்கப்படவுள்ளன.

இப் புனரமைப்புக்குத் தேவையான நிதி உதவியை அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் வழங்கவுள்ளது.

புனரமைப்புக்கான முன்னேற்பாடுகளைச் சண்டிலிப்பாய் உதவி அரச அதிபர் மேற்கொண்டு வருகின்றார். (இ-139)

### கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

மூளாய், ஜூலை 30
வலிகாமம் மேற்குப்பகுதிகளில் அலைந்து திரியும் நாய்களைப்பிடித்து அழிப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது.

கடந்த வாரம் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தின்போது இந்த விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

மேற்படி நடவடிக்கைகளுக்கான சகல பணிப்புரைகளையும் பிரதேச செயலர் கா. சந்திரராசா சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளார். (இ-99)

### வேலைவாய்ப்புக் கடன்

பருத்தித்துறை, ஜூலை30
பருத்தித்துறை மக்கள் வங்கிக்கிளை, இப்பகுதியிலுள்ள வேலையற்ற இளைஞர், யுவதிகளுக்கு உதவுமுகமாக சுய உதவி வேலைவாய்ப்புக்கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கி வருகின்றது.

இதுவரை விண்ணப்பித்தவர்களின் விண்ணப்பங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டு தகுதியுடையவர்களுக்கு 50 ஆயிரம் ரூபா வரை கடன் உதவி வழங்கப்படும் என மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-118)

### பரி.யோவான் அணியினர்

யாழ்ப்பாணம், ஜூலை 30
கடந்த 22,23 ஆம் திகதிகளில் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில் இரதோற்சவம், தீர்த்தோற்சவம் நடைபெற்ற தினங்களில் பரி. யோவான்முதலுதவிப் படையினர் கடமை ஆற்றினர்.

யாழ். மாவட்ட உதவி ஆணையாளர் எஸ். அருந்தவராஜா தலைமையிலான இந்து அணியினர் தெல்லிப்பழைத் தடை முகாம், மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை ஆகிய பகுதிகளில் கடமை புரிந்துள்ளனர். (இ-8)

### சிறுவர் பாடசாலை

செம்பியன்பற்று,
ஜூலை 30
வடமராட்சி கிழக்கு நாகர்கோயில் தெற்கில் ''ஊற்று'' நிறுவனத்தினரால் சிறுவர் பாடசாலை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. (இ-36)

### வாய்க்கால் திருத்தம்

நீர்வேலி, ஜூலை 30
நீர்வேலிச் சந்தியிலிருந்து கிழக்குப் பக்கமாக வயலுக்குச் செல்லும் வெள்ளவாய்க்கால் சமுர்த்தித்திட்டத்தின் கீழ் திருத்தப்படவுள்ளது.

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் கே. கேதீஸ்வாரின் தலைமையில் திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான முயற்சிகளை நீர்வேலி வடக்கு விவசாயிகள் சம்மேளனம் மேற்கொண்டுள்ளது. (இ-110)

### கஞ்சா அழிப்பு

தென்மராட்சி, ஜூலை 30
பளை அரசர்கேணிப் பகுதியில் விளைவிக்கப்பட்டு விற்பனைக்காகக் கொண்டுவரப்பட்ட கஞ்சாச் செடிகள் பாதுகாப்பு அரணில் படையினரால் சோதனையிடப்பட்ட போது கண்டு பிடிக்கப்பட்டது.

அவை அந்த இடத்திலேயே அழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

### எழுத்தறிவூட்டற் பயிற்சி

யாழ். கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவால் சாவகச்சேரி கச்சாய் வீதியில் உள்ள றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையில் வயது வந்தோருக்கான எழுத்தறிவூட்டற் பயிற்சி வகுப்பு பாடசாலை அதிபர் க. தம்பிமுத்து தலைமையில் கச்சாய் விகோரியன் ஆலய பங்குத்தந்தை எஸ், நேசநாயகம் அடிகளாரால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்த பயிற்சி வகுப்பில் 40 பேர் கலந்து கொண்டனர், (இ-3)

### கண்டல் மரங்கள் வெட்டத் தடை

செம்பியன்பற்று,
ஜூலை 30
வடமராட்சி கிழக்குப் பகுதியில் கண்டல் மரங்கள் பெருமளவில் வெட்டப்பட்டு வந்ததையடுத்து மருதங்கேணி உதவி அரச் அதிபர் வி. பி. வேலாயுதபிள்ளை வடமராட்சி கிழக்குப் பகுதியில் கண்டல் மரங்கள் வெட்டுவதைத் தடைசெய்யுமாறு கிராமசேவகர்களைககேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து இப்பகுதியில் கண்டல் மரங்களை வெட்டுவது தடைசெய்யப்பட்டுள்ளது.

### புனரமைப்பு வேலைகள்

உடுப்பிட்டி நாவலர் பாலர் பாடசாலைக்கும் உடுப்பிட்டி நாவலர் சனசமூக நிலையத்துக்கும் புனரமைப்பு வேலைகளுக்காக அகதிகளுக்கான ஐ. நா. தூதரகம் 4 இலட்சத்து 75 ஆயிரம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்திருந்தது.

புனரமைப்பு வேலைகள் தற்போது பூர்த்தியடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்



சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் கிளை 22, வெதுப்பகம் (அராலி மேற்கு) ஆகியவற்றின் தலைவரும், அராலி வண்ணப்புரம் ஸ்ரீ விசாலாட்சி அம்பாள் சமேத விஸ்வநாதேஸ்வரர் தேவஸ்தான பரிபாலன சபை, அராலி மேற்கு உலோலசிட்டி ஐக்கிய நாணயசங்கம், அராலி மத்தி கிராம அபிவிருத்திச் சங்கம் ஆகியவற்றின் தலைவருமான

உயர்திரு.

**வி. செல்வரத்தினம்**

அவர்கள் அண்மையில் அகில இலங்கை சமாதான நீதிவானாக அரசினால் நியமிக்கப்பட்டதையிட்டு நாம் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். இவர் மேன் மேலும் சிறந்து விளங்க எல்லாம்வல்ல இறைவனை வேண்டி அவர் யாவும் பெற்று சீரும் சிறப்புமாக மேன்மை நிலை அடைய மனமார வாழ்த்துகின்றோம்

கிளைக் குழுவினர் - 22

(57932)

# பெருவிழா

அதிபர்

**A. S. நடராஜா**

புகழ்பூத்த எங்கள் அதிபர் A. S. நடராஜா அவர்களை எமது சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் நிகழ்விலே மனமாரப் பாராட்டுகின்றோம், வாயார வாழத்துகின்றோம். தொடர்ந்து தன்னை அர்ப்பணித்து வரும் ஒரு மாமனிதன், மாமேதை. இடர் பல வரினும் செயல் நிறைவேற்றமே இவர் குறிக்கோளாகும். கஷ்டமான காலங்களில் எங்கள் படை உத்தியோகத்தர்கள்

ராஜா மகேஸ்வரராஜா, ந, நவரஞ்சன்

அவர்கள் தம் உயிரையும் துச்சமாக மதித்து செயற்பட்டதை நாம் மறப்போமா?

திரு. திருமதி க. அருந்தவராஜா
படை உத்தியோகத்தர்கள், அங்கத்தவர்கள்.
வயாவிளான் ம. மகாவித்தியாலய
சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் படையினர்.

(57946)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 24 — 01 — 1979



மண்ணின் மடியில் 22 — 07 — 1996

செல்வன்

**வேலுப்பிள்ளை தயாநிதி**

(நெல்லியடி மத்திய மகாவித்தியாலய மாணவன்)

நிலவாகி உன்முகம் முகிலிடை மறைந்தாலும்
நிஜமாகி நீ இங்கு வருவாயென நாம்
பலகாலம் நினைந்தே பார்த்திடத் துடித்திருப்போம்
பதிலேதும் கூறாது உன் பயணம் முடிந்ததே.
தினமும் உன் நினைவுகளை சுமந்து உன்
ஆத்மா சாந்தியடைய எம் கண்ணீர்ப் பூக்களை
காணிக்கையாக்குகின்றோம்.

உன் பிரிவால் துயருறும்:
அன்பு அப்பா, அம்மா, அக்காமார்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

கரணவாய் மத்தி,
கரவெட்டி.

(57918)

## பதவியேற்பு

வடமராட்சி, ஜூலை 30

வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் புதிய தலைவராக லயன் எஸ். பசுபதி அண்மையில் பதவி நிலைப் படுத்தப்பட்டார்.

மந்திகையிலுள்ள வடமராட்சி லயன்ஸ் கழகத்தின் பணிமனையில் நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தின் போது இப்புதிய பதவி நிலைப்படுத்தப்பட்டது.

(ஐ-173)

## ஞானச்சுடர் வெளியீடு

வடமராட்சி, ஜூலை 30

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் இதழ் வெளியீடு நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் தொண்டமானாறு செல்வச்சந்நிதி கோயில் சுற்றாடலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும்.

இவ்வெளியீட்டு விழாவில் வலி. வடக்கு பிரதேச சபையின் நூலகர் சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் இதழை வெளியிட்டு வைப்பார். ஆசிரியர் ஆறு. திருமுருகன் ஆய்வுரை நிகழ்த்துவார்.

(ஐ-173-30)

## குழைவெட்ட ஏறியவர் தவறி வீழ்ந்தார்

ஆட்டுக்குக் குழைவெட்ட மாமரத்தில் ஏறியவேளை தவறி விழுந்து ஒருவர் கைமுறிந்து காயமடைந்தார் கொக்குவிலில் நேற்று முன் தினம் இடம் பெற்றஇச்சம்பவத்தில் அளவெட்டியில் இருந்து இடம் பெயர்ந்த முருகையா செல்வநாயகமூர்த்தி (வயது 45) என்பவரே காயமடைந்தவராவார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15)

## தறித்து வீழ்த்திய பனையில் சிக்கி ஒருவர் காயம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

தறித்து வீழ்த்தப்பட்ட பனை மரத்தினுள் சிக்குண்டு ஒருவர் படுகாயமடைந்தார். இவரது கால் முறிந்துள்ளது.

சண்டிலிப்பாய் கல்வளை வீதிப்பகுதியில் நேற்று முன் தினம் இடம்பெற்ற இச்சம்பவத்தில் கே. தவராசா (வயது 43) என்பவரே படுகாயமடைந்தவராவார் இவர்யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-15-139)

MEDI QUICK
**மெடிக் குயிக்**
ஆய்வு கூடம்
தினசரி காலை
7. 30 — 8. 30 வரை
சுன்னாகம்
பெற்றோல் செற்றுக்கு
அருகில் இயங்கும்
அ. சுந்தரங்கம்
ஆய்வுகூடப் பரிசோதகர்
(55462)

**A\L 99**
**தமிழ்**
திருமதி மீரா
புதிய பிரிவு ஆரம்பம்
1998-08-01
காலை 8 மணி [சனி]
D. M. I.
366, Stanley Road,
Jaffna.
(சி/4302)

# பட்டப்பகலில் நகைகள் சூறை

## இணுவிலில் சம்பவம்

வலி. வடக்கு, ஜூலை 30

நல்லூர் கோவில் கொடியேற்ற உற்சவத்துக்குச் சென்றுவிட்டு திரும்பியோரின் வீட்டுக்கு வந்த இரு இளைஞர்கள் பெண்ணின் தங்க நகைகளைப் பயமுறுத்தி அபகரித்துக் கொண்டு அவரது கணவரை பலவந்தமாக சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சென்றனர்,

இணுவில் பகுதியில் நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம் பெற்றது.

கோவிலில் இருந்து வீடு திரும்பிய கையோடு வந்த மேற்படி இரு இளைஞர்களும் பட்டப்பகலில் இத் துணிகர கொள்ளையை நடத்தினர்.

மனைவியின் சங்கிலி, காப்பு, மோதிரம் உட்பட நகைகள் அபகரிக்கப்பட்டன.

கணவரை சைக்கிளில் ஏற்றிச் சென்ற அந்த இளைஞர்கள் கோண்டாவில் பகுதியில் உள்ள ஒரு வீட்டில் வைத்து தாக்கியதாகவும் — இரண்டு லட்சம் ரூபா பணம் தருமாறு மிரட்டிய பின் அவரை விடுவித்ததாகவும் தெரியவருகிறது.

(ஐ-86)

# பாடசாலையில் கோழிப் பண்ணை

வலிகாமம்தெற்கு, ஜூலை30

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் விவசாய மாணவர்களால் கோழிப்பண்ணை ஒன்று அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

விவசாயபாடத்தில் கோழி வளர்ப்பு ஒரு பகுதியாக இருப்பதால் ஒரு முன்மாதிரியாக இக் கோழி வளர்ப்பு முறை மேற்கொள்ளப்படுகிறது.

கல்லூரியின் அதிபர் இராமலிங்கம், விவசாயபாட ஆசிரியர் திரு. பாலகிருஷ்ணன் ஆகியோரின் முயற்சியால் இது மேற்கொள்ளப் பட்டுள்ளது.

ஏனைய விவசாய பாடம் கற்பிக்கும் பாடசாலைகளுக்கு இது ஒரு முன்மாதிரியாக அமைந்துள்ளதென இதனை பார்வையிட்ட விவசாயபாட ஆசிரிய ஆலோசகர் சி. கயிலைமகான் தெரிவித்தார்.

மேற்படி கல்லூரியில் மிக விரைவில் விலங்கு வேளாண்மை செய்யவும் முயற்சிகள் மேற்கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப் பட்டது.

(ஐ-152)

உ

சாவகச்சேரி வடக்கு – மீசாலை

**பன்றிக்கேணி கந்தசாமி தேவஸ்தானம்**

**கதிர்காம உற்சவ - பெருவிழா**

24-07 98 வெள்ளி முதல் உற்சவ பெருவிழா ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

தேர்த்திருவிழா:
07-08-98 வெள்ளி காலை 8 மணிக்கு

விரத பூர்த்தி
தீர்த்தத் திருவிழா:
08-08-98 சனி காலை 9 மணிக்கு

ஆலய பிரதம குரு:
''சிவாகமவித்பத் ஜோதி'', ''பண்டிதர்''
ஜெயஸ்ரீ. கு. ஜெகதீஸ்வரன் குருக்கள்,
(புன்னாலைக் கட்டுவன்)

அவர்கள் ஆசியுடன்
சிவஸ்ரீ. கி. கிருஷ்ணசாமிக்குருக்கள்
(புன்னாலைககட்டுவன்)
கிரியைகளை நடத்தி வைப்பார்கள்'

அனைவரும் கலந்து சிறப்பித்து அருள் பெறுக!

ஆலய பரிபாலன சபை,
பண்டிதர் க. சங்கரப்பிள்ளை,
பரிபாலகர்.

(சி-4418)

மணற்பகுதி - புத்தூர்

**கலையகம் ச. ச. நிலையம்**

**வீனஸ் வி. கழகம்**

பொன்விழா போட்டித் தொடரில்

சுமங்கலி ஜுவல்ஸ் (118A, கஸ்தூரியார் வீதி)
நியூ கமல் செரமிக்ஸ் (37, ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்

ஆதரவில்

**மென்பந்து கிரிக்கற் சுற்றுப் போட்டி**

27-07-98 தொடங்கி நடைபெறுகின்றது.

செயலாளர்
வீனஸ் விளையாட்டுக்கழகம்.

[57948]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

# சர்வாதிகாரத்தை நோக்கி....

தென்னிலங்கையில் உள்ள ஐந்து மாகாண சபைகளுக்கும் நடைபெற ஏற்பாடாகி உள்ள தேர்தலை ஒத்திவைப்பதற்கான உத்தியோக பூர்வ அறிவித்தல் இன்னும் வெளியிடப்பட வில்லை. எனினும் இம்மாதம் 15 ஆம் திகதி நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அந்த முடிவை இப்போது மூத்த அமைச்சர்கள் சிலர் தாங்களாகக் கசியச் செய்து வருகிறார்கள். நீதி அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் கடந்த 24 ஆம் திகதி கொழும்பில் நடைபெற்ற வர்த்தக சம்மேளனக் கூட்டத்தில் மாகாண சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்படும் என்பதனை மெல்லிதாக வெளியிட்டார்.

ஜனநாயகத்தைப் பேணுவதற்கு தேர்தல் அவசியம் என்று கூறியஅதேவேளை, வடக்கு—கிழக்கில் நடைபெறும் போருக்குப் பங்கம் ஏற்படும் விதத்தில் தேர்தல்களை நடத்துவது உசிதமில்லை எனத் தெரிவித்தார். எனினும் ஒத்திவைக்கப்படும் தேர்தலை எவ்வளவு விரைவில்நடத்த முடியுமோ அவ்வளவு விரைவில் நடத்த அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ளும் என்பது அவரது தகவல்.

ஆனால், இன்னொரு மூத்த அமைச்சரான டீ. எம். ஜெயரத்ன வெளியிட்டுள்ள தகவல், மாகாண சபைத் தேர்தல் இப்போதைக்கு நடக்காது என்பதை மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. வடக்கு — கிழக்கில் பணிபுரியும் முப்பதாயிரம் படையினரையும் எப்போது தென்பகுதிக்கு அழைத்துக் கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலைஏற்படுகின்றதோ அப்போது தான் மாகாண சபைத்தேர்தலை நடத்த முடியும் என்பது அவரது நிலைப்பாடு — கருத்து!

தம்மை ஆள்பவர்களை — தமது அலுவல்களை நிர்வகிப்பவர்களை — மக்கள் வாக்களித்து தேர்தல் மூலம் தெரிவு செய்வதே ஜனநாயகத்தின் அடித்தளம்.

மேலும் தேர்தலை ஒத்திவைப்பது ஜனநாயகத்துக்கு சாவு மணி அடிப்பதாகும்; சர்வாதிகாரத்துக்கான ஆரம்பமாகும்.

மிகத் தெளிவான இந்த உண்மையை மறைத்துக் கொண்டு அரசாங்கமும் அதன் அமைச்சர்களும் மாகாண சபைத் தேர்தலை ஒத்திவைப்பதை நியாயப்படுத்த முனைகிறார்கள். இது மக்களை ஏமாற்றும் செயலன்றி வேறல்ல.

மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டால் பதவியிலுள்ள பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பலவீனம் வெளியாகி விடும் என்ற அச்சமே தேர்தலை ஒத்திவைப்பதற்கு உள்ளந்தரங்கமான மூலகாரணமாகும்.

தமிழ்மக்களை ஏமாற்றுவது போல சிங்கள மக்களையும் அரசாங்கம் ஏமாற்றத் தொடங்கி உள்ளதென்பதற்கு இவ்விவகாரம் நல்லதோர் உதாரணமாகும்.

## மந்திகை ஆஸ்பத்திரியில்

# டாக்டர்கள் இன்றி சிகிச்சை பாதிப்பு

நெல்லியடி, ஜூலை 30

மந்திகை மருத்துவ மனையில் டாக்டர்களுக்கு நிலவும் பற்றாக்குறையினால் நேற்றுக் காலை சிகிச்சை பெற வந்த கர்ப்பிணித் தாய்மார்களில் சிலர் ஏமாற்றத்துடன் வீடு திரும்பினார்கள்.

தற்பொழுது இங்கு மாவட்ட வைத்திய அதிகாரி உட்பட ஐந்து டாக்டர்களே கடமையிலுள்ளனர்.

இங்கு ஏற்கனவே பணி புரிந்து வந்த தென்பகுதி டாக்டர்கள் மூவர் கடந்த வாரம் இடமாற்றலாகிச் சென்றுள்ளனர். இதேவேளை மேலும் இரு டாக்டர்களில் ஒருவர் ஊர்காவற்றுறை அரசினர் ஆஸ்பத்திரிக்கு பதில் கடமைக்காகச் சென்றுள்ளார்; மற்றொரு டாக்டர் வடமராட்சி கிழக்கு அம்பன் மத்திய மருந்தகத்திற்கு பதில் கடமைக்கு (மூன்று தினங்கள் மட்டும்) அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றார்.

தினமும் இங்கு சிகிச்சை பெறவரும் சுமார் 500-க்கு மேற்பட்ட வெளிநோயாளிகளைப்பார்வையிட போதிய டாக்டர்கள் இல்லை.

(ஐ-109)

# நல்லூரில் உரையரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 30

நல்லூர் உற்சவ காலத்தையொட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் யாழ்ப்பாணம் சேக்கிழார் கழகம் ஒழுங்கு செய்துள்ள உரையரங்கில் —

இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2-30மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி மாணவன் இ. சர்வேஸ்வரா ''திருநாவுக்கரசர்'' என்ற தலைப்பிலும் — நாளை வெள்ளிக்கிழமை யாழ். இந்துக்கல்லூரி மாணவன் கு. செந்தூரன் ''சுந்தரர்'' என்ற தலைப்பிலும் உரையாற்றுவர்.

(ஐ-8)

# ஜா-எலவில் நடமாடிய 2 தமிழர்கள் கைது!

கொழும்பு, ஜூலை 30

நேற்றுமுன்தினம் கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து கொழும்பு நோக்கி மாலைதீவு ஜனாதிபதியின் வாகண அணி வந்து கொண்டிருந்த போது ஜா-எல பகுதியில் சந்தேகத்திற்கிடமான விதத்தில் நடமாடியதாகக் கூறப்படும் தமிழ்ப்பெண் ஒருவரையும், ஆண் ஒருவரையும் ஜா-எல பொலீஸார் கைதுசெய்துள்ளனர்.

சிங்களத்தில் சரளமாக உரையாடிய அந்தப் பெண்ணின் கைப்பையில் 'டெனிம்' கரற்சட்டை ஒன்று இருந்தது எனப் பொலீஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட பெண்ணிடமும் மற்றையவரிடமும் அவர்கள் தங்கியிருக்கும் இடத்தை நிரூபிக்கும் ஆவணங்கள் எதுவும் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

# சாயி சிந்தனை

ஒரு வீடு கட்டுகிறோம்; அதில் வாயில் அமைக்கின்றோம்; என்றால் எதற்கு? நாம் வெளியே செல்வதற்கும், உள்ளே வருவதற்கும், நமக்கு வேண்டியவர்கள் வந்து செல்வதற்கும் மட்டுமே! வாயில் இருக்கிறதே என்று தெருவில் திரியும் நாய்களும், பன்றிகளும் உள்ளேவர அனுமதிப்போமா? அவற்றை விரட்ட வேண்டாமா?

அதே போல தீய எண்ணங்களையும், தீய சிந்தனைகளையும் விரட்டிவிட வேண்டும். நல்ல எண்ணங்களை வரவேற்க வேண்டும். இதுதான் உனது புலன்களின் கடமை. இத்தகைய பலம் வாய்ந்த தெய்வத்துபத்தை எவரும் புரிந்து கொள்வதில்லை.

[ஆதாரம்: சனாதன சாரதி]

## நல்லூர் உற்சவகால சிறப்பம்சம்

# கந்தன் கழல் பணிமின்!

ஊழி முதல்வன் தந்த உயர் புதல்வன்
வெற்றி வேற்படைக் கையோன், சுடர்
ஆழிப் படையோன் மருகன், அருளுறு குஞ்சரி
குறத்திக் கேள்வன், சட்கோண சரவணன்
கோழிக் கொடியோன் கோலமயிலோன், தேற்றி
அணைக்கும் பெற்றியன், தொழுவார்க்கு
என்றும்
எளியன், நல்லையின் ஏக தலைவனாம் கந்தனின்
கழலைப் பணிமின் கருணை பெறுமின்!

க. தியாகராசா

கோண்டாவில்.

# கடவத்த பொலீஸாரால் 17 தமிழர்கள் கைது

கொழும்பு ஜூலை 30

குறித்த நேரத்தில் வெடிக்கும் குண்டுகளை வெடிக்க வைத்து நாட்டின் பலபகுதிகளில் தொலைத் தொடர்பு கோபுரங்கள், மின்மாற்றிகள் ஆகியனவற்றைத் தகர்த்த சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனச் சந்தேகிக்கப்படும் 17 தமிழர்களை கடவத்த பொலீசார் கொழும்பிலும் அதனை அண்டிய பகுதிகளிலும் கடந்த திங்களன்று கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் 8பேர் மொறட்டுவ பகுதியில் நகை செய்யும் தொழிலில் ஈடுபட்டவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நகைத் தொழிலாளர்கள் அனைவரும் மட்டக்களப்பு களுவாஞ்சிக் குடியைச் சேர்ந்தவர்கள் எனவும் ஏனைய 9 பேரும் கொட்டாஞ்சேனைப் பகுதியில் தேடுதலை மேற்கொண்டபோது 5 வீடுகளில் இருந்து கைது செய்யப்பட்டனர் எனவும் தெரிவிக்கப் படுகிறது.

(ஐ - 10)

# சுந்தரர் குருபூசை

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் நடத்தும் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

(ஐ-8)

★ ★ ★

அகில இலங்கைத் திருமுறை மன்றம் நடத்தும் சுந்தரமூர்த்திநாயனார் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லூர் சட்டநாதர் சிவன் ஆலயத்தில் நடைபெறவுள்ளது. ஆலய பூசையைத் தொடர்ந்து சுந்தரமூர்த்தி சுவாமிகளுக்கு விசேட அபிடேக ஆராதனைகள், சுவாமிகளின் தேவாரபாராயணம், சொற்பொழிவுகள் என்பன இடம்பெறும்.

மாலை 5 மணிக்கு கந்தர்மடம் அருள்மிகு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசைகளும், திருமுறை பாராயணமும், பண்டிதர் வ. பேரின்பநாயகம் தலைமையிலான ''சுந்தரர் தமிழ்'' எனும் பொருளிற் சொற்பொழிவும் நடைபெறவுள்ளன.

(ஐ-8)

★ ★ ★

உடுவில் இநது இளைஞர் மன்றம் நடத்தும் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நாளை வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு சங்குவேலி அருள்மிகு வெட்டுக்கட்டைப் பிள்ளையார் ஆலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் மன்ற ஆலோசகர் எஸ். முத்தையாவின் சொற்பொழிவும், மன்ற இசை வகுப்பு மாணவரின் பண்ணிசையும் இடம்பெறவுள்ளன.

(ஐ-8)

★ ★ ★

கைதடி அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசை நடைபெறும்.

(ஐ-30)

# சந்தையில் சுகாதாரச் சீர்கேடு

வலி. வடக்கு பிரதேச சபையின் மல்லாகம் சந்தையில் சுகாதார சீர் கேடுகள் நிறைந்து காணப்படுகின்றன.

கடந்த கால இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இச் சந்தை சேதமடைந்துள்ளது.

தற்போது மரக்கறியும் மீனும் ஒரே இடத்தில் வைத்து வியாபாரம் செய்யப்படுகின்றது. இதன் காரணமாக மரக்கறி வாங்குபவர்கள் அசௌகரியங்களைச் சந்திக்க நேரிடுகிறது.

(ஐ - 86)

# வயாவிளான் மகாவித்தியாலய எழுச்சி விழா

யாழ்ப்பாணம், ஜூலை 30

வயாவிளான் மத்திய மகா வித்தியாலய எழுச்சி விழா இன்று வியாழக்கிழமை உரும்பிராய் இந்துக் கல்லூரி மண்டபத்தில, அதிபா ஆ. சி நடராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

காலை 9 மணிக்கு ஆரம்பமாகும் முற்பகல் நிகழ்வுகளில் யாழ். இந்துக்கல்லூரியின் முன்னாள் அதிபா அ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராக கலந்துகொள்வார்.

இந்நிகழ்வில்பரி. யோவான் முதலுதவிப்படை, சாரணர் இயகக வைபவங்கள் இடம் பெறும். இதில் பரி. யோவான் முதலுதவிப்படை உதவி ஆணையாளராகப் பதவியுயர்வு பெற்ற கே. அருந்தவராஜாவைக் கௌரவித்தல், சின்னம் சூட்டுதல், சிறப்புரை, சாரணர் தமது பெற்றோரைக கௌரவித்தல், சான்றிதழ் வழங்கல் என்பனவும் இடம்பெறும்.

பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும் மாலை நிகழ்வுகளில் யாழ். பல்கலைக்கழக முதுநிலை விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராஜா பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். இதில் கையெழுத்துச் சஞ்சிகை வெளியீடு, பழைய மாணவர் செ. செல்வரத்தினத்தைக் கௌரவித்தல், வாழ்த்துரைகள், பாடசாலை பாண்ட் வாத்திய அரங்கேற்றம், வாத்திய விருந்து, ஆசிரியர் மாணவர் கலை நிகழ்ச்சிகள் என்பன இடம்பெறும்.

(ஐ-8)

## உதய வாக்கு

எந்த உயிரிடமும் அன்பாக இரு. அன்பே உயிரின் இயல்பு. எல்லோரிடமும் அன்புடன்பழகு. நீயும் வாழ், பிறரையும் வாழவிடு. இதுவும் அகிம்சையின் தத்துவம்.

-மகாவீரர்.

# நாளை

ஆடி -15
வெள்ளிக்கிழமை
திதி: அட்டமி
பின்னிரவு: 5.38 வரை.
நட்சத்திரம்: சுவாதி
வைகறை: 4.48வரை.
சுந்தரமூர்த்தி சுவாமிகள்
குருபூசை
சுபநேரம்: 6.03 - 7.33
ராகுகாலம்: 10 33 12.03
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# நல்லூர்ப் பதிக்கு நடந்து போவோம்!



நல்லைப்பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

அல்லற்றுயர் தருமூழ் மெல்ல
அகன்று போம் நீ வா
கல்லொத்திடு மனங்கணத்தில்
கரைந்து போம் விரைந்து வா
நில்லன் பொடு நினைந்து
நீ நான் அறநின்று மகிழ்ந்து
நல்லைப்பதிக்கு நேராய்
நடந்து போவோம் நாமெல்லாம் வாரீர் சீராய்

-யோகர் சுவாமிகள்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### வீடுவளவு விற்பனைக்கு

சாவகச்சேரி ஆடியம்பிட்டி ஒழுங்கையில் கண்டிவீதி ஓரமாக நான்குபரப்புக் காணியும், இரு வீடுவளவுகளும் விற்பனைக்குண்டு, தொடர்பு: த. வேலாயுதம். சட்டத்தரணி, ஸ்ரேசன்றோட், சாவகச்சேரி. (ஒ/4397)

### கலர் மீன்கள்

கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்ட புதிய இனங்களை உடைய கலர் மீன்கள் விற்பனைக்குண்டு. A. அருளானந்தம், 588/8, நாவலர் வீதி, அரியாலை (ஸ்ரான்லிக் கல்லூரி முன் ஒழுங்கை) 12 மணியிலிருந்து பார்வையிடலாம்.

(57904)

### சேவல் குஞ்சுகள்

பஜிரா பிறவுண் சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. விலை 25 ரூபா மட்டுமே! மல்லிகாபதி சந்தைமுன் ஒழுங்கை, மானிப்பாய். (57923)

### யாழ்ப்பாணம்

யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள். மக்கள் எல்லோரும் போனபின்பு யாழ்ப்பாணம் வலிகாமத்தில் நடந்ததைக் கூறும் ஒரேயொரு நூல். அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை வீரகேசரியில் எழுதிய கட்டுரைகள் ரூபா 50.

(57929)

### அபிராமி திருமண சேவை

வெளிநாட்டு மணமக்களுக்கு உள்நாட்டு லெக்ஸார் G S. ஆகிய மணமகன்களுக்கும் படித்த பெண்கள் தேவை. தொடர்பு: பரந்தாமன் ராசாத்தி, ஆடியபாதம் வீதி, 1ஆம் ஒழுங்கை, கொக்குவில் அபிராமி திருமண சேவை.

(55460)

### மணப்பெண்கள் தேவை

செவ்வாய் தோஷமுள்ள பட்டதாரிக்கும், கிரகபாவம் குறைந்த ஆசிரியருக்கும், செவ்வாய் தோஷமுள்ள வங்கி உத்தியோகத்தருக்கும் அழகிய மணப்பெண்களை பெற்றோர்கள் எதிர்பார்க்கிறார்கள். மேல் விவரங்களுக்கு நேரில் / கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். விநாயகர் திருமணசேவை, 63, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். [857951]

## விற்பனைக்கு

கொழும்பில் இருந்து கொண்டு வரப்பட்ட கடைப் பாவனைக்குரிய டீ பிறீசர் (குளிர்சாதனப் பெட்டி) விற்பனைக்குண்டு.
தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
**விஜிதா கபே**
247, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(57955)

## விற்பனைக்கு

★ விபூதி [இந்தியா]
★ அரைத்த சந்தனம்
★ சந்தனப் பவுடர்
★ அஷ்பந்தனம்

ஆகியன கிடைக்கும்.

கை. தியாகநாதசர்மா
பண்டாரக்குளம்
பிள்ளையார் கோயிலடி,
நல்லூர்.

(57956)

# கசிப்பு வைத்திருந்தவருக்கு அபராதம்

நெல்லியடி, ஜூலை 30

சட்ட விரோதமான பத்து லீற்றர் கசிப்பை வீட்டில் வைத்திருந்த பெண் ஒருவருக்கு பருத்தித்துறை நீதிவான் அபராதமாக 15 ஆயிரம் ரூபா செலுத்துமாறு உத்தரவிட்டார்.

புலோலி மேற்கு சீமாவளவைச் சேர்ந்த சின்னத்துரை அன்னப்பிள்ளை என்பவரை கைது செய்த பருத்தித்துறை பொலிஸார் கடந்த 23 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்த சமயம், குறித்த தொகையை அபராதமாகச் செலுத்துமாறு பருத்தித்துறை மாவட்ட நீதிவான் உத்தரவிட்டார்.

(ஜ–109)

# தேவை


யாழ். நகரில் உள்ள பிரபலமான விற்பனை நிலையத்திற்கு ஒரு கணக்குப் பதிவாளர் (BOOK KEEPER) தேவை. பகுதி நேரமாகவும், அல்லது முழு நேரமாகவும் பணி புரியலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 05 - 08 - 98

இல. 767,
மே/பா உதயன்

(57952]

# வாழ்த்துகின்றோம்



ஸ்ரீ சச்சிதானந்தா என்ர – பிறைசஸ் உரிமையாளரும் கைதடி ஸ்ரீ சச்சிதானந்தா ஆச்சிரமத்தின் தலைவருமான

**திரு. இராமலிங்கம் குழந்தைவடிவேலு**

அவர்கள் அண்மையில் சமாதான நீதிவானாக நியமனம் பெற்றதை நாங்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றோம்.

வீ. சிங்கராசாவும்
சகோதரி சிங்காராணியும்.

அரைக்கும் ஆலை,
கைதடி.

(57949)

# வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம் 12 – 06 – 1921



மறைவு 08 – 07 – 1998

திருமதி
**இராசையா நல்லம்மா**
[தாவடி]

உங்கள் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

அன்னாரது இறுதி கிரியையில் கலந்து கொண்டவர்களுக்கும், உதவிகள் பல புரிந்தோருக்கும் நன்றிகள் கூறுவதுடன் இன்று நடைபெறும் அந்தியேட்டி நிகழ்விலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் யாபேரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அம்பிகை இல்லம்,
சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு.

(57954)

# சமய சந்நிதிகளில்

நெடுந்தீவு, ஜூலை 30

உடுவில் கற்பகப் பிள்ளையார் கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

அடுத்த மாதம் 8ஆம் திகதி வரை 11 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

எதிர்வரும் 5ஆம் திகதி சப்பறத் திருவிழாவும், 6ஆம் திகதி காலை தேர்த்திருவிழாவும், 7ஆம் திகதி காலை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறும். (ஐ–182)

★ ★ ★

அராலி மேற்கு மேலாம் சாட்குண்ணியமூர்த்தி கந்த ஞானியார் ஆலய ஸ்ரீ சிவகாமசவுந்தரி சமேத சிதம்பரேஸ்வரர் தேவஸ்தான அஷ்டொத்தர கலச (108) சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை காலை 7மணிக்கு நடைபெறும்.

(ஐ–111)

★ ★ ★

தென்மராட்சி, ஜூலை 30

பளை, கச்சார்வெளிப் பிள்ளையார் ஆலய மகோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும். அடுத்த மாதம் ஆறாம் திம் தேர் உற்சவமும், ஏழாம் திகதி தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ–117)

★ ★ ★

நெல்லியடி, ஜூலை 30

வதிரி பூவற்கரை பிள்ளையார் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத் தினங்கள் உற்சவம் நடைபெற்று எதிர்வரும் 7ஆம் திகதி தீர்த்தத்துடன் நிறைவு பெறும்.

உற்சவ நாள்களில் தினமும் சமய சொற்பொழிவும் இடம்பெறும். (ஐ–109)

★ ★ ★

மிருசுவில் படித்த மகளிர் குடியேற்றத் திட்ட (துர்க்காபுரம்) ஸ்ரீ ஞானதுர்க்கை அம்பாள் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

உற்சவத்தின் 9ஆம் நாளான எதிர்வரும் 7ஆம் திகதி தீக்குளிப்பு வைபவமும் ஞானதுர்க்காதேவியின் தெய்வீக அருட்கலையுடன் கூரிய வாள்களின் மீது ஏறி வீதி வலம் வருதலும், 10ஆம் நாள் தீர்த்த உற்சவமும் இடம்பெறும். (ஐ–31)

## குருபூசை

கொழும்புத்துறை, ஜூலை30

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் ''முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளின் 13 ஆவது வருட குருபூசை இன்று வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தலைமையில் நடைபெறும். (ஐ–30)

## மருந்து வழங்கல்

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை, கரவெட்டி மத்தியமருந்தகம், பருத்தித்துறை மத்திய மருந்தகம் ஆகிய நிலையங்களுக்கு வடமராட்சி லயன்ஸ் கழகம் மருந்துப் பொருள்களை வழங்கியுள்ளது. (ஐ–173

# புதிய வேலைத் திட்டங்கள்

தென்மராட்சி, ஜூலை 30

சாவகச்சேரி பிரதேசசபை அபிவிருத்தி நிதியிலிருந்து பல வேலைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேசத்தில் உள்ள மட்டுவில் காளி கோயில் செல்லப்பிள்ளையார் வீதி, மறவன்புலோ நுணாவில் வீதி ஆகியவற்றை அமைக்க தலா ஒரு லட்சம் ரூபாவும் —

நாவற்குழி பொது நூல் நிலைய புனரமைப்பு வேலைகள் பாலாவி குடிதண்ணீர் கிணறு அமைக்க தலா50ஆயிரம் ரூபாவும் —

வரணி வாணன்பிட்டி பொதுக் கிணறு அமைக்க 30 ஆயிரம் ரூபாவும் —

ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பிரதேச சபை தலைவர் அன்ரன் பொன்னையா தெரிவித்தார்.

(இ–117)

## ஆலயம் புனரமைப்பு

நெடுந்தீவு, ஜூலை 30

நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய புனரமைப்புப் பணிகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன. பொதுமக்கள் திருப்பணி வேலைகளுக்கு முடிந்த உதவிகளை வழங்குமாறும் ஆலய அறங்காவல் சபைத் தலைவர் நா. இராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ஐ–111)


# தேசிய சேமிப்பு வங்கியின் உற்சவகால கருமபீடம்

நல்லூர் முருகன் கொடியேற்ற தினம்
28-07-98 முதல் தீர்த்தோற்சவம் வரை மக்கள்
" ரிதீரேகா "

பரிசுதிய சேமிப்புச் சான்றிதழ்களை இலகுவில் கொள்வனவு செய்வதற்கு வசதியாகத் தேசிய சேமிப்பு வங்கி யாழ்ப்பாணக் கிளையின் கருமபீடம் ஒன்று நல்லூர் பின் வீதிக்கண்மையில் மாநகரசபை முன்பாகச் செயற்படுகின்றது என்பதை அறியத் தருகின்றோம். அங்கு ரூ. 100 பெறுமதியான "ரிதீரேகா" சான்றிதழ்களைத் தாராளமாகக் கொள்வனவு செய்ய முடியும். ரிதீரேகா சான்றிதழ்களைக் கொள்வனவு செய்யும் ஒவ்வொருவருக்கும் முருகப்பெருமானின் மூவர்ணப் படம் அன்பளிப்பாக வழங்கப்படும்.

மதிநுட்பமான சேமிப்புக்கு
**ரிதீரேகா**

பணத்தைச் சேமியுங்கள்
பரிசுகளை வெல்லுங்கள்

**தேசிய சேமிப்பு வங்கி**
யாழ்ப்பாணம்.

(C/4422)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் அனுசரணையுடன் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் யாழ். மத்திய கல்லூரியின் நிறுவுனர்தின சுழல் கேடயத்துக்கான 6 பேர் கொண்ட 6 ஓவர் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மற்றும் இரு கால் இறுதிப் போட்டிகள் இன்று வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஆட்டங்களில் மோதும் அணிகளின் விவரம் வருமாறு–

★ யாழ். பல்கலைக்கழக அணி எதிர் ஜொலிஸ்ரார் வி. க. அணி.

★ சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணி எதிர் ஓல்ட் கோல்ட்ஸ் அணி. (இ-3)

# இசைமாணி பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனம் வழங்குவதில் பாரபட்சம்

## மாகாண கல்வி அமைச்சு மீது குற்றச்சாட்டு

தென்மராட்சி, ஜூலை 30

'வடக்கு—கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் அண்மையில் வழங்கப்பட்ட ஆசிரிய நியமனங்களின் போது இசைமாணிப் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப் பட்டதில் பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது'.

மேற்கண்டவாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநருக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

1990 தொடக்கம் 1994 வரையான காலப்பகுதியில் இசைமாணிப்பட்டம் பெற்ற 26 பேர் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றியபோதிலும் அவர்களில் ஒன்பது பேருக்கே ஆசிரிய நியமனம் வழங்கப் பட்டுள்ளதாகவும்—

அதிலும் முதுமுறை அடிப்படை புறக்கணிக்கப்பட்டுத் தன்னிச்சை முறையில் நியமனம் வழங்கியுள்ளதால் சிரேஷ்ட பட்டதாரிகள் விரக்தியடைந்துள்ளதாகவும் முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யூனியன் கல்லூரிக்கு ஐவர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டத்தில் கடந்த 15 ஆம் திகதி முதல் பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டவர்களில் 5 பேர் தற்போது மருதனார்மடத்தில் இயங்கும் யூனியன் கல்லூரிக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

மூன்று கணித, விஞ்ஞானப் பட்டதாரிகளும், இரண்டு கலைப் பட்டதாரிகளும் இவ்வாறு நியமிக்கப் பட்டுள்ளனர்.

இந்த நியமனத்தால் இதுவரை நிலவி வந்த கணித, விஞ்ஞான, கலைப் பாடங்களுக்கான (இசை, நடனம் தவிர்ந்த) ஆசிரியர் வெற்றிடங்கள் நிரப்பப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார். (இ-7)

## சார்க் மாநாட்டை ஒட்டி ரூ. $2\frac{1}{2}$ முத்திரை வெளியீடு

கொழும்பில் நடைபெறும் 10 ஆவது சார்க் உச்சிமாநாட்டின் ஞாபகார்த்தமாக ரூபா $2^{50}$ பெறுமதியான முத்திரை ஒன்றை இலங்கைத் தபால் திணைக்களம் வெளியிட்டுள்ளது.

பண்டாரநாயக்கா ஞாபகார்த்த மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான வைபவம் நடைபெற்றது.

தபால் தொலைத் தொடர்புசாதன அமைச்சர் மங்கள சமரவீர மாநாட்டில் கலந்து கொண்ட நாடுகளின் தலைவர்களுக்கு இந்த முத்திரைகளை வழங்கினார்.

# இந்தியாவின் பங்களிப்பைக் கோரி ஆலயங்களில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூலை 30

இனப்பிரச்சினை விடயத்தில் இந்தியாவின் பங்களிப்பு தேவை என்பதை வலியுறுத்தி யாழ். மாவட்டத்தில் உள்ள இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் நேற்று பிரார்த்தனைகளும், வழிபாடுகளும் இடம் பெற்றன.

குடாநாட்டில் உள்ள பல இந்து, கிறிஸ்தவ ஆலயங்களில் வழிபாடுகளையடுத்து நண்பகல் 12 மணிக்கு மணி ஓசை எழுப்பப்பட்டது.

''இலங்கைத் தீவில் தமிழ் பேசும் மக்கள் எதிர்நோக்கிக் கொண்டிருக்கும் இனப் பிரச்சினைக்கு பொருத்தமான தீர்வைத் தேடும் வகையில் இந்திய அரசு மேற்கொண்டிருந்த முயற்சிகளின் பெறுபேறாக செய்துகொள்ளப்பட்ட இந்திய — இலங்கை ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்ட 11 ஆவது ஆண்டு நிறைவு நாளில் இந்தியாவின் பிரதமர் வாஜ்பாய் கொழும்பு வந்துள்ளார்'' என ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பின் செய்திக் குறிப்பு தெரிவித்தது. (இ 3)

## சீருடைத் துணி

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் மாணவர்களுக்கான இலவச சீருடைத் துணிகள் நேற்று வழங்கப் பட்டதாகக் கோட்டக் கல்வி அலுவலர் அ. கயிலாய பிள்ளை தெரிவித்தார்.

## செஞ்சிலுவை கப்பலில் மருந்து

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். போதனா வைத்திய சாலையின் பாவனைக்கான மூன்றாம் கந்தாய மருந்து வகைகளில் ஒரு தொகுதி நேற்று வந்த செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் சேவைக் கப்பலில் எடுத்து வரப்பட்டுள்ளது.

இதில், அத்தியாவசிய பாவனைக்கான ஒட்சிசன் சிலிண்டர்களும் எடுத்து வரப்பட்டுள்ளன. (இ-15-139)

## பேராதனை

# வெளிவாரி பரீட்சை முடிவு நேற்று வெளியாகின

யாழ்ப்பாணம், ஜூலை 30

பேராதனைப் பல்கலைக் கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினரால் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் நடத்தப் பட்ட முதல் கலைத் தேர்வுப் பரீட்சை முடிவுகள் (ஜி. ஏ. கியூ) நேற்று புதன்கிழமை பேராதனையில் வெளியாகின.

யாழ்ப்பாணம், கண்டி, பேராதனை, கொழும்பு, குருணாகல் ஆகிய இடங்களில் இப் பரீட்சை நடத்தப்பட்டிருந்தது.

யாழ். மாவட்டத்தில் இருந்து இப் பரீட்சைக்குத் தோற்றியோர் தமது பெறுபேறுகளை உடன் அறிய விரும்பின் வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவினருடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம் எனவும்—

எனினும் பரீட்சார்த்திகள் யாவரினதும் பெறுபேறுகள் நேற்றே தபாலில் சேர்க்கப் பட்டுள்ளன என்றும்— பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பரீட்சைகள் பிரிவு வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

இதேவேளை இம்முறை பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களில் சிலர் குறிப்பிட்ட சிலபாடங்களில் சித்தி பெறத் தவறிவிட்டனர் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-7)

## செம்மணிக்குளம் பாவனைக்கு

உலக தரிசன நிறுவனத்தின் ஆதரவில் புனரமைக்கப்பட்டு வந்த ''செம்மணிக் குளம்'' நேற்று புதன்கிழமை காலை உத்தியோகபூர்வமாக பாவனைக்குத் திறந்து வைக்கப்பட்டது.

சங்கிலியன்தோப்பு விவசாய சம்மேளனத்தினைச் சேர்ந்தோர் இக்குளத்தின் புனரமைப்பு வேலைகளை மேற்கொண்டிருந்தனர்.

நேற்று நடைபெற்ற வைபவத்தில் யாழ். மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார்.

## அ. அட்டைகள் வந்தன

நவாலி, ஜூலை 30

யாழ். மாவட்டத்திலிருந்து தேசிய அடையாள அட்டை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்களில் ஆயிரம் பேரின் அடையாள அட்டைகள் யாழ். செயலக ஆட்பதிவுத்திணைக்களப் பிரிவுக்கு வந்து சேர்ந்துள்ளன.

இவற்றை அந்தந்த பிரதேச செயலகங்களுக்கு தரம் பிரித்து அனுப்புவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன. (100)

## 82 தபாற் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், ஜூலை 30

யாழ். மாவட்டத்துக்குரிய வெளியூர்த்தபால்கள் அடங்கிய 82 தபாற்பொதிகள் நேற்று புதன்கிழமை செஞ்சிலுவைச்சர்வதேசக்குழுவின் கபபல் மூலம் யாழ். எடுத்து வரப்பட்டன.

தபால்களைத் தரம்பிரித்து விநியோகிக்கும் பணிகள் இன்று ஆரம்பமாகும் என்றும்—

இதேவேளை யாழ். குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் சேகரிக்கப் பட்ட வெளியூர்த் தபால்கள் அடங்கிய 29 தபாற்பொதிகள் நேற்றையதினம் செஞ்சிலுவைச்சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதாகவும் யாழ். பிரதம தபால் [illegible] தெரிவித்தார். (இ-7)


## உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கான பயிற்சிநெறி

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களின் கணக்காய்வு வேலைகளில் ஈடுபடுத்துவதற்கான உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர்களுக்கான பயிற்சிநெறி ஒன்று 10-08-98 தொடக்கம் 03 மாத காலங்களுக்கு யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபையால் நடத்தப்படவுள்ளது. பயிற்சி முடிவில் பரீட்சை நடத்தப்பட்டு வட-கிழக்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரால் சான்றிதழ் வழங்கப்படும்.

இப்பயிற்சி பெற்றவர்களையே எதிர்காலத்தில் உத்தியோகப் பற்றற்ற கணக்காய்வாளர்களாக நியமிப்பது என வட-கிழக்குக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அறிவித்துள்ளார். எனவே தற்போது மேற்படி பதவியில் கடமையாற்றுவோரும், பின்வரும் தகுதியுடையோரும் சபையில் ரூபா 10/- செலுத்தி விண்ணப்பப்படிவத்தைப் பெற்று, மாவட்டச் செயலாளர், யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை, 14, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 05-08-98 இற்கு முன்னதாக விண்ணப்பிக்கவும். கணக்காய்வு சேவையில் ஈடுபடும் பொழுது அச்சேவைக்குப் படி வழங்கப்படும்.

தகைமை:-

க. பொ. த. உயர்தர வர்த்தகப் பிரிவில் 04 பாடம் சித்தியடைந்தவர்கள்.
(கணக்கியல், வர்த்தகம் உட்பட)

அல்லது

கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திர உயர் பிரிவு சித்தியடைந்தவர்கள்.

வயதெல்லை:- 21 — 40

மாவட்டச் செயலாளர்,
யாழ்ப்பாண மாவட்டக் கூட்டுறவுச் சபை.

(சி/4424)



## LION AIR

## முக்கிய அறிவித்தல்

பலாலிக்கும் – கொழும்புக்கும்

இடையில் இன்று (30-7-98) விமான சேவை நடைபெறமாட்டாது.

இன்று பயணம் செய்ய பதிவு செய்தவர்களுக்கு கீழ் காணும் விவரப்படி பயண ஏற்பாடு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

30-07-98 702 - 1 ஆவது சேவை — 31-07-98 காலை 7.30 மணிக்கு

30-07-98 602 - 2 ஆவது சேவை — 01-08-98 காலை 7 30 மணிக்கு

மேற்படி நேரப்படி சமூகம் தருமாறு வேண்டுகின்றோம்.

★ வீடியோ கசட் அனுப்புபவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளவும்:

முகவர்
லயன் எயர்

(சி/4429)



## வாழ்த்துகின்றோம்

இலங்கை கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால்

"கலாபூஷணம்"

விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட

ஓவியக் கலைஞர் (Artist மணியம்)

பெரியதம்பி சுப்பிரமணியம்

அவர்களைப் பாராட்டுவதோடு அன்னார் நீண்ட ஆயுளுடனும் ஆரோக்கியத்துடனும் வாழ நல்லைக் கந்தனைப் பிரார்த்திக்கின்றோம்.

நல்லூர் முருகன் சனசமூக நிலையம்

செட்டித்தெரு,
நல்லூர். (57967)



## வாழ்த்துகின்றோம்

எமது கலாசாலை விரிவுரையாளர்,
மிருதங்க வித்துவான்

திரு. க. ப. சின்னராசா

அவர்களுக்கு இந்து கலாசார அமைச்சின்

''கலாபூஷணம்''

விருது கிடைத்தமையையிட்டு மகிழ்ச்சியடைவதுடன் அவரது கலைப்பணி மேலும் சிறக்க உளமார வாழ்த்துகின்றோம்.

கல்வியாளர் கழகம்,
ஆசிரிய கலாசாலை,
கோப்பாய். (57963)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் கைதிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

களுத்துறை சிறைச்சாலையில் நேர்ந்த துரதிர்ஷ்டமான சம்பவத்தை அடுத்து என் உடல்நலம் தேறுவதற்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் வாழ்த்துக்கள் தெரிவித்தவர்களுக்கும், பிரார்த்தனை நடத்தியவர்களுக்கும் உள்ளன்போடு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

களுத்துறைச் சிறையில் நடைபெற்ற கோழைத்தனமான தாக்குதலுக்கு அங்குள்ள சகல தமிழ்க் கைதிகளும் காரணமல்ல. பல கைதிகள் கடிதம் மூலம் தமது வருத்தத்தையும் தெரிவித்துள்ளனர். ஒருசில கைதிகள் மட்டுமே இத் தாக்குதலை நடத்தினார்கள்.

என் மீதான தாக்குதல் குறித்த விசாரணையில் அப்பாவிகள் பாதிக்கப்படக் கூடாது என்பதை வலியுறுத்தியுள்ளேன்.

சிறையில் விசாரணையின்றி தடுத்துவைக்கப்பட்டுள்ள தமிழ் கைதிகளை விடுதலை செய்விப்பதற்கான எமது முயற்சிகள் இந்தச் சம்பவத்தால் பாதிக்கப்படமாட்டா. எமது கட்சியும், நானும் தொடர்ந்தும் தமிழ் கைதிகளின் விடுதலைக்கான நடவடிக்கைகளில் ஈடுபடுவோம்.

நடைபெற்ற சம்பவத்தைப் பயன்படுத்தி எமது கட்சியை சீர்குலைக்கவதந்திகளையும், பொய் புரட்டுக்களையும் எமக்கு எதிரான சில சக்திகள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் கட்டவிழ்த்துவிட்டன. தற்போது அவர்களது உள்மன ஆசைகள் பலிக்காமல் போய்விட்டன.

தாக்குதல்களை எதிர்கொள்ள வேண்டிவரும், நெருக்கடிகளைச் சந்திக்க வேண்டிவரும், தடைகளைத் தாண்டித்தான் முன்நோக்கிச் செல்லமுடியும் என்பதில் எனக்கும், எனது கட்சிக்கும் அனுபவமும் உறுதியும் தேர்ச்சியும் இருக்கிறது.

என் நலத்தில் நாட்டம் கொண்டு, ஆழ்ந்த அன்புடன் பிரார்த்தித்த, வாழ்த்திய தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் அனைவருக்கும் மீண்டும் என் இதய நன்றியை உரித்தாக்குகிறேன். தொடர்ந்தும் உங்கள் சேவையில் உங்களோடு உங்கள் வீட்டுப் பிள்ளையாக இருப்பேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன் :- என்றுள்ளது. (இ-3)

## வாஜ்பாய்...

(முதலாம் பக்கத் தொடர்)

மலையகத் தமிழர் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக இப்பேச்சுக்களில் ஆராயப்படவிருக்கின்றது.

அதேவேளை—தமிழ் கட்சிகள் இன்று மாலை வாஜ்பாயுடன் பேச்சு நடத்த உள்ளன. (இ-3)

## தேன்..

(முதலாம் பக்கத் தொடர்)

ராசா (25 வயது) ஆகியோர் நேற்று முன்தினம் தேன் எடுப்பதற்காகச் சென்றனர்.

இவர்கள் நேற்று வரை திரும்பாததையடுத்து இவர்களை தேடிச் சென்ற சமயம் தலை வெட்டப்பட்டு முண்டமான நிலையில் அப்பகுதி வாய்க்காலில் இருந்து மீட்கப்பட்டனர்.

மரண விசாரணைக்காக வவுனியா ஆஸ்பத்திரியில் சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன. (வ 3-164)

## யாழ்...

(முதலாம் பக்கத் தொடர்)

யளவில் நல்லூர் இந்து விடுதியில் யாழ். மாநகரசபையில் கூட்டம் மேயர் பொன் சிவபாலன் தலைமையில் ஆரம்பமானது.

கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, ஈழமக்கள் ஜனநாயக கட்சி ஆகியவற்றில் பிரதிநிதிகளை உள்ளடக்கிய 16 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்,

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்கள் வருமாறு:-

★ செம்மணி புதைகுழி விவகாரத்தை துரிதப்படுத்த வேண்டும் என்று மனித உரிமைகள் ஆணைக் குழுவையும், குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்று அரசையும் கோருவதுடன் கிருஷாந்தி விவகாரத்தில் நீதியைநிலை நாட்டிய நீதித்துறைக்கு பாராட்டும் தெரிவித்தல்.

★ யாழ். மாநகர சபை வேலைவாய்ப்பு மனித வள அபிவிருத்திக் குழு ஒன்றை தெரிவு செய்தல்.

★ யாழ். மாநகரஎல்லைக்குள் அழிந்துள்ள வீடுகள், கட்டடங்கள் பற்றிய விவரங்களைத் திரட்டுதல்,

எதிர்வரும் ஆண்டு மாநகர சபையின் பொன்விழா ஆண்டாக இருப்பதால் அதற்கான நடவடிக்கைகளைத் திட்டமிடுதல்.

★ பவளவிழா கொண்டாடிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரத்தை நீடுழி வாழ்கவென வாழ்த்தி வாழ்த்து அனுப்புதல்.

லண்டனில் அமரரான யாழ். மாநகரசபை முன்னாள் மேயர் டாக்டர் எஸ். எஸ். தர்மலிங்கம், அமரர் தொழில் அதிபர் க. கனகராசா ஆகியோருக்கு அனுதாப பிரேரணைகளும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. (இ-5-ரீ)

## புலிகள் மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்)

படையினர் சிறு ஆயுதங்கள், மோட்டார், ஆட்லறிகள் கொண்டு தாக்கி அவர்களின் தாக்குதலை முறியடித்ததாகவும்—

தமது தரப்பில் சேதம் ஏதும் இல்லை என்றும்—

புலிகள் தரப்புச் சேதம் தெரியவரவில்லை என்றும்—

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## பேராசிரியர்...

(முதலாம் பக்கத் தொடர்)

பெரிதும் மதிக்கப்படும் இவர் பல்கலைக்கழக விரிவுரைத் துறையில் பணியாற்றிய காலம் போதுமானது அல்ல என்று காரணம் காட்டியே அவருக்குப் பேராசிரியர் நியமனம் மறுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

இந்த நியமனம் மறுக்கப்பட்டது யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட மாணவர்களுக்கு வழங்கப்படும் பட்டத்துக்கு உரிய அங்கீகாரம் கிடைப்பதைப் பாதிக்கும் எனக் கூறப்படுகிறது. (இ-3)

## வாஜ்பாய்-ஷெரீப்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவ்விரு விடயங்கள் தொடர்பாகவும் வெளிவிவகார அமைச்சர் மட்டத்தில் பேச்சுக்கள் நடத்தி ஒரு திட்டத்தைத் தயாரித்துத் தொடர்ந்து பேச்சுக்களை முன்னெடுப்பது என்று இணக்கம் காணப்பட்டது. (இ-3)


அரங்கச் செயற்பாட்டுக் குழு

**கருத்தரங்கு**

அரங்கத் தொடர்பாடலில்
புதிய பரிமாணங்கள்

— க. சிதம்பரநாதன் —
(ஆசிரியர் கலாசாலை,
முத்துத்தம்பி மகாவித்தியாலயம், திருநெல்வேலி.)

**31-07-98 வெள்ளி மாலை 3.30 மணி**

ஆர்வமுள்ளவர்களைக் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

19, பழம் றோட், கந்தர்மடம். — TAG (57970)



எமது வீடியோ
CD வெளியீடு!

★ சந்திப்போமா
(Pyramid)

★ செங்கோட்டை
★ வில்லாதி வில்லன்
★ சூரியன்
★ கருத்தம்மா
★ கன்னித் தாய்
★ தனிப் பிறவி

**சுப்பலோ வீடியோ**
யாழ்ப்பாணம்.
(சி/4430)



**நல்லூர், வடமராட்சி 'லயன்ஸ்' கழகங்களும்**
**அரங்க செயற்பாட்டுக் குழுவும்**

இணைந்து நடத்தும்

**பரீட்சை முன்னோடிக் கருத்தரங்கு**

**க. பொ. த. உ/த (ஒகஸ்ட் - 1998)**

வணிகப் புள்ளிவிவரவியல்:— ஆசிரியர் திரு. றோய்

நேர அட்டவணை (புதிய நேரம்)

30 - 07 - 98 பி. ப. 1.00 மணி Science Hall
31 07 - 98 மு. ப. 9.00 மணி வட இந்து மகளிர் கல்லூரி

★ பொருளியல் பாடத்துக்கான கையேடுகளும் வழங்கப்படும்.

(57971)


## விடைத்தாள்கள் இன்று வருகின்றன

யாழ்ப்பாணம், ஜூலை 30

எதிர்வரும் 3 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் ஜி.சீ.ஈ. (உயர்தர) பரீட்சையில் முதல் 10 நாள்களுக்கான முதல்தொகுதி வினாத்தாள்கள் இன்று எடுத்துவரப்படுகின்றன.

## இலங்கைப் பிரச்சினையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

கும் சூழ்நிலையில் சார்க் மாநாட்டுக்கு வருகை தந்துள்ளீர்கள்.

ஈழத்தமிழர் பிரச்சினையில் 1983 இல் இருந்து இந்தியா கரிசனை செலுத்தி வந்திருக்கிறது. 1987 இன் பின் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் இந்தியாவின் அக்கறையில் ஒரு தேக்க நிலையை கடந்த சில வருடங்களாக ஏற்படுத்தியிருப்பது உண்மையே. 1983 தமிழ் மக்களுக்கெதிரான இன வன்முறையில் இலங்கை அரசின் ஆணவமான போக்கை அன்றைய பாரதப் பிரதமரான இந்திரா காந்தி கண்டித்ததோடு தமிழ் மக்களின் பிரச்சினையை சர்வதேச மயப்படுத்துவதிலும் காத்திரமான பங்களிப்பை வழங்கி இருந்தார்.

ஈழத்தமிழர் அரசியல்இயக்கங்கள் பூட்டான் தலைநகர் திம்புவில் இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்கு மத்தியஸ்தம் வகித்தது இந்தியா. இதன் மூலம் போராளிகளுக்கு சர்வதேச அந்தஸ்தை ஏற்படுத்திக் கொடுத்தது.

1987 இல் பெரும் எடுப்பில் பொருளாதார முற்றுகையின் கீழ் யாழ்ப்பாணத்தில் ஒபரேசன் லிபரேசன் என்ற இராணுவ நடவடிக்கையை ஆரம்பித்தபோது இந்திய விமானப்படை விமானங்கள் யாழ்ப்பாண வான் பரப்பில் பறக்க விடப்பட்டு ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவின் அரசியல் அழுத்தத்தில் இந்தியா — இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானது. அதன் அடிப்படையில் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் தற்காலிகமாகவேனும் இணைக்கப்பட்டன.

இங்கு ஏற்பட்ட கசப்பான அனுபவங்களும் சென்னையில் வைத்து இந்தியாவின் தேசிய தலைவர் படுகொலை செய்யப்பட்டதும் இந்தியாவின் தமிழர்கள் பாலான அக்கறையில் பின்னடைவை ஏற்படுத்தியது. இந்தியாவின் உறவுகள் கசப்பானதால் ஏற்பட்ட இன்னல்களைச் சில வருட அனுபவத்தில் தமிழ் மக்கள் உணர்ந்துள்ளார்கள்.

இந்தியாவுடனான பாரம்பரிய, கலாசார, மொழி ரீதியான உறவுகள் ஈழத்தமிழர்களைப் பொறுத்த மட்டில் தாய்வீட்டு உறவுகள் போன்றவை. தற்போது எமது பிரச்சினையில் இந்தியா தலையிட்டு மத்தியஸ்தம் வகிக்க வேண்டும் என்பது எமது சமூகத்தில் பல்வேறு பிரிவினரிடமும் காணப்படும் ஓர் எதிர்பார்ப்பாகும். அந்த வகையில் இலங்கை வந்திருக்கும் உங்களிடம் பின்வரும் கோரிக்கைகளை முன்வைக்கின்றோம்.

★ பொதுமக்கள்ஐக்கியமுன்னணி அரசு முன் வைத்துள்ள தீர்வுத்திட்ட யோசனைகள் தேய்ந்து கலைந்துப் போயுள்ளன. யுத்த பேரிகை வாத அலையில் அவை அள்ளுண்டு போய்க்கொண்டிருக்கின்றன. தமிழ் மக்கள் ஒரு தேசியஇனம் என்ற வகையில் இந்த நாட்டின் பெரும்பான்மை இன மக்களுடன் சமத்துவமாக வாழ்வதற்கான அவர்களின் சுயமரியாதை, கௌரவத்தை உறுதி செய்யும் தீர்வு ஒன்றை உருவாக்குவதில் இந்தியா காத்திரமான பங்களிப்பை வழங்கவேண்டும். இலங்கையில் மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் உட்பட சகல இனங்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் வகையில் இலங்கை பல்லின மக்களின் நாடு என்பதை உறுதி செய்ய வேண்டும். வடக்கு—கிழக்கு பூராவுமே யுத்த பிரதேசங்களாக இருப்பதால் மக்கள் அனுபவிக்கும் இன்னல்கள் வரலாற்றில் கண்டிராதவை.

★ உணவு, இருப்பிடம், பாதுகாப்பு, சுகாதாரம், ஜீவாதாரமானதொழில் என்பன பாதிக்கப்பட்ட நிலையில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு லட்சக்கணக்கான மக்கள் அகதிகளாக இடம்பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் இடம்பெயரும்போது வங்கக்கடலிலும் பெரும் தொகையில் இறந்து போவதும் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. சாதாரண மக்களின் வாழும் உரிமை இங்கு மறுக்கப்பட்டிருக்கிறது. சாதாரண தமிழ் மக்களின் உயிர் உடைமைப் பாதுகாப்புக்கான உத்தரவாதங்களைப் பெறுவதற்கும் —

★ காணாமல் போனவர்களின் எண்ணிக்கை முன்னெப்போதையும் விட அதிகரித்திருப்பதாலும், புதைகுழி அச்சங்கள் தோன்றி இருப்பதாலும், மனித உரிமைகளை பாதுகாப்பதற்கும் —

கடந்த 15 வருடங்களுக்கு மேலாக நடக்கும் ஜனநாயக மறுப்புச் சூழ்நிலை தமிழ் தலைமைத்துவத்தையும் மக்களது கருத்துச் சுதந்திரத்தையும் அழித்திருப்பதால் ஜனநாயகத்தை உறுதி செய்வதற்கும் —

வட கிழக்கில் வெவ்வேறு பகுதிகளில் துண்டாடப்பட்ட நிலையில் வாழ்வதால் மக்கள் நடமாடும் சுதந்திரத்தைஇழந்திருப்பதாலும்—

திட்டமிட்ட குடியேற்றங்கள் மீண்டும் தலைதூக்கியிருப்பதாலும் —

அவசரகாலச்சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் முறையே மக்கள் 25,19 வருடங்களுக்கு மேலாக வாழ்ந்து வருவதாலும் —

புனர்வாழ்வு நடவடிக்கைகள் மந்தகதியை அடைந்திருப்பதாலும், உலர் உணவு விநியோகம் குறைக்கப்பட்டிருப்பதாலும் —

வடக்கு — கிழக்கு மக்களின் வாழ்வில் சமாதானத்தையும், ஜனநாயகத்தையும், மனித உரிமைகளை உறுதி செய்வதிலும், சிதைந்த வாழ்வைப் புனரமைப்பதிலும் இந்தியா தனது செல்வாக்கைப் பிரயோகித்தாக வேண்டும்.

★ இந்தியா தான் சக்திமிக்க நாடு என்று அண்மைக் காலத்தில் நிரூபித்திருக்கின்ற சூழ்நிலையில் அதன் தென்முனைக்கப்பால் சில கிலோமீற்றர் தூரத்திலுள்ள ஒரு நாட்டில் பாரிய யுத்தமும், மனித உயிரழிவும் தொடர்ச்சியாக நிகழ்ந்து கொண்டிருப்பது இந்தப் பிராந்தியத்தில் வேண்டப்படாத சக்திகள் முகம் காட்டுவதற்குத் தலைப்படலாம். எனவே உப கண்டப் பிராந்தியத்தின் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கும் இந்தியா இலங்கையின் இனப் பிரச்சினைக்கான தீர்வு ஒன்றை எட்டுவதில் பங்களிப்பைச் செலுத்தியாக வேண்டும்.

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-07-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org